Registered as a Newspaper

றீ போறிங், றீ -
கிரைண்டிங் மற்றும்
லைன் - போறிங்,
போன்றவற்றிற்கு

எந்த வகையான வாகனங்களாயினும்
24 மணி நேரத்தில் செய்து கொடுக்கப்படும்
தரமான ஜப்பான் பிஸ்டன், லைனர்
றெ செட்கள், எல்லாவிதமான ஜப்பான்
டீசல், பெற்றோல் வாகனங்களுக்குரிய
எஞ்சின் பெயாரிங்களும் உண்டு.

எதிரிசிங்க பிரதர்ஸ் லிமிட்டெட்,
"ஒட்டோ கோட்"
567, பிரின்ஸ் ஒப்வேல்ஸ் எவுவன்யு,
கொழும்பு - 14.
தொலைபேசி - 431808, 434012.

# உதயன்

விலை ரூபா 3-50

Re-boring Re-grinding
Line Boring etc...

Done within 24 hrs
for all makes of vehicles

GENUINE JAPANESE PISTON LINER KIT
SETS AND ENGINE BEARING FOR ALL
JAPANESE DIESEL AND
PETROL VEHICLES

EDIRISINGHE
BROTHERS LTD.

'Auto Court'
567, Prince of Wales Avenue,
Colombo - 14
Tel: 431808, 434012

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ வைகாசி ௴ 06 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 24 (20 - 05 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 90



நேற்று முன்தினம் இரவு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் தேனிசை செல்லப்பாவின் தமிழீழ எழுச்சிப்பாடல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இசை நிகழ்ச்சிக்கு முன்னதாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணியின் பிரதி அமைப்பாளர் செங்கதிர், மகளிர் முன்னணியின் வடமராட்சிப் பொறுப்பாளர் செல்வி லூசியா, வடமராட்சியின் கலை, கலாச்சார பிரிவுப் பொறுப்பாளர் செல்வி சீதா, நெல்லியடி பிரதேச மக்கள் முன்னணி அமைப்பாளர் குணபால், விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் புதுவை ரட்ணதுரை ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம். (உ-9)

## இலங்கை அரசுக்கு விடுதலைப் புலிகள் வழங்கியுள்ள இறுதிச் சந்தர்ப்பம்!

டாக்டர் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்ட தகவல்

(விவரம் 5 ஆம் பக்கத்தில்)

## ரூ.450 கோடி நிதி உதவி

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திப் பிரிவு இலங்கைக்கு ஒன்பது கோடி டாலர் (இலங்கைப் பணத்தில் 450 கோடி ரூபா) நிதி உதவியளிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, புனரமைப்பு, வேலை வாய்ப்பு, தனியார் அபிவிருத்தி, பாடசாலை மாணவருக்கு போஷாக்கு உணவு வழங்குவது ஆகிய திட்டங்களைச் செயற்படுத்த இந்த நிதி உதவி பயன்படுத்தப்படும். (உ)

# மாறிவரும் அரசியல் சூழ்நிலை பற்றி
# பிரபா-பாலகுமார் சந்தித்துப் பேச்சு!

## யாழ். நகரில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 20

யாழ். பஸ் நிலையப் பகுதியில் உள்ள புத்தக நிறுவனம் ஒன்றில் சுமார் ஒரு லட்சம் ரூபா பணம் திருடப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. திருடர்கள் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ:9)

## வடமராட்சியில் நேற்று இடம்பெற்றது

யாழ்ப்பாணம், மே 20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும், ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய பிரமுகருமான திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரனும் நேற்று வடமராட்சியில் சந்தித்து சுமார் நான்கு மணி நேரம் பேசினர்.

தற்போது மாறி வரும் அரசியல் சூழ்நிலை குறித்து இந்தப் பேச்சுக்களின்போது முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈழவர் ஜனநாயகமுன்னணியின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான வேலைகளில் ஈடுபடுவதற்காக அண்மையில் கொழும்பு சென்றிருந்த திரு. பாலகுமாரன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பினார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி




மலையக மக்களும் எங்கடை ஆட்கள்தான் என்டதை நாளைக்கு நாங்கள் ஒண்டு திரண்டு காட்ட வேணும் கண்டியளோ......!

## சுப நேரம்

20- 5 - 90
ஞாயிற்றுக்கிழமை வைகாசி06
சுபநேரம் ;
8.52 -10. 22
இராகுகாலம்
04 22 - 05.52

## நாளைய ஹர்த்தாலை ஆதரித்து ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 20

மலையகத்திலிருந்து சுமார் ஒரு லட்சம் பேரை இந்தியாவிற்கு நாடுகடத்த அரசு எடுக்கும் தீவிர நடவடிக்கைகளுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அந்த வகையில் இம்மாதம் 21ஆம் திகதி, விடுதலைப் புலிகளால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஹர்த்தால், பகிஷ்கரிப்பு மற்றும் கதவடைப்பு நடவடிக்கைகளுக்கு எமது பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்குகின்றோம்.

ஈரோஸின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மலையக மக்கள் தொடர்பாக இலங்கை, இந்திய அரசு

(7 ஆம் பக்கம் பார்க்க)

### சந்திரசேகரன் விடுவிக்கப்படாவிடின்

## மலையகத்தில் நாளை முதல் பரந்த அளவில் போராட்டம்

நுவரெலியா, மே 20

கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் இன்றும் விடுதலை செய்யப்படவில்லை.

நாளை திங்கட்கிழமைக்குள் அவர் விடுதலை செய்யப்படாவிட்டால் மலையகம் எங்கும் பரந்த அளவில் வேலை நிறுத்தங்களை நடத்தவும் எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று அவர் விடுவிக்கப்படுவார் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததை அடுத்து தலவாக்கலைப் பகுதியில் பதற்றம் சிறிது குறைந்து காணப்பட்டது. உண்ணாவிரதமும் கைவிடப்பட்டது. ஆனால் நேற்று மாலைவரை சந்திரசேகரன்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தத் துறை

யாழ்ப்பாணம், மே 20

யாழ். பல்கலைக்கழகத்தில் விரைவில் சைவசித்தாந்தத் துறை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சைவ சித்தாந்த துறையை ஆரம்பிக்க தேவையான 15 லட்சம் ரூபாவில் 12 லட்சம் ரூபா தற்சமயம் கிடத்துள்ளதாகவும் மேலும் மூன்று லட்சம் ரூபா தேவை என்றும் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

இத்துறைக்கு பேராசிரியர் ஒருவரை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மற்றைய ஆரம்ப வேலைகளும் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## ஈழத் தமிழ்க் கைதிகள் தமிழகத்தில் உண்ணாவிரதம்

நூற்றுக்கதிகமான இலங்கைத் தமிழர்கள் சென்னைச் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்று பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது.

தங்களை அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கக் கோரியே இந்த உண்ணாவிரதத்தை அவர்கள் ஆரம்பித்திருப்பதாகவும் —

நடவடிக்கை எடுக்கத் தவறினால் தற்கொலை செய்யப்போவதாக இந்த இலங்கைத் தமிழர்கள் பயமுறுத்தியுள்ளார்கள் என்றும் அச்செய்தி கூறுகிறது.

இருபது தொடக்கம் முப்பது வயதுக்குட்பட்டவர்களே உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

ஒரிஸ்ஸா அகதி முகாம்களில் இருந்து தப்பி பின்னர் தமிழ்நாடு வந்தபோது கைது செய்யப்பட்டவர்களே தற்போது உண்ணாவிரதத்தில் குதித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-எ)

## அரசாங்க எழுது வினைஞர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், மே 20

நாளை 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறஇருந்த அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் 29 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

செவ்வாய் காலை 8. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெறும். (இ)

## 7 ஆயிரம் தாதியருக்கு பற்றாக்குறை

கொழும்பு, மே 20

நாட்டில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் சுமார் ஏழாயிரம் தாதிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக தெரியவந்து உள்ளது.

இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் தாதிகளுக்குப் பயிற்சி வழங்க போதிய இடவசதியின்மை, போதனா ஆசிரியர் பற்றாக்குறை ஆகியவைஎன்று தெரிவிக்கப்படுகிறது.

பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசு விசேட நடவடிக்கை எடுத்துள்ளது. (உ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ் அறிக்கை

கொழும்பு, மே 20

வியட்னாம் தலைவர் ஹோசிமின்னின் நூறாவது பிறந்த தினத்தை ஒட்டி ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் அறிக்கைஒன்றை விடுத்து உள்ளது. (உ)

## மலையக மக்கள் வெளியேற்றம்; ஒருபோதும் அனுமதிக்க முடியாது!

### ஸ்ரான்லி டொமினிக் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 20

கடந்த காலங்களில் "ஸ்ரீ" எதிர்ப்பு போராட்டத்தில் போகவந்தாலவில் உயிர் நீத்தவர்கள் உட்பட மலையகத்தவர் பலர் எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வந்துள்ளனர்.

ஏனவேஅவர்கள் இந்த மண்ணை விட்டு வெளியேற்றப்படுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அவர்கள் பூரண அதிகாரங்களுடன் எமது மண்ணான தமிழீழத்தில் குடியேற்றப்பட வேண்டும். அதுவரை மலையக மக்கள் தமது உரிமைகளை பெற தாமே போராட வேண்டும். அதற்கு வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் பூரண ஆதரவு என்றும் உண்டு என்பதை விளக்கவே நாளை ஹர்த்தாலிற்கு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மோசடி பாஸ்போர்ட்; யாழ்வாசி விளக்க மறியலில்!

கொழும்பு, மே 20

மோசடி செய்யப்பட்டதாக கூறப்படும் பாஸ்போட்டுடன் கனடாவுக்கு பயணம் செய்ய முயற்சித்தவடபகுதி இளைஞர் ஒருவரை கட்டுநாயக்காவிமான நிலையத்தில் வைத்து சுங்கத்திணைக்கள அதிகாரிகள் பிடித்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை கணேசலிங்கம் என்ற இந்த இளைஞர் சந்தேகத்தின் பேரில் நேற்று கோட்டை நீதவான் வால்டர் ஜெயவர்தனா முன் ஆஜர் செய்யப்பட்டார்.

இம்மாதம் 28ஆம்திகதிவரை அவரை விளக்கமறியலில்வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (உ)

## மிதி வெடியில் சிக்கிக் காயம்

முல்லைத்தீவு மே 20.

கொக்குத் தொடுவாயில் உள்ள மீனவர் வாடி ஒன்றில் மிதி வெடிக்கு ஒருவர் இலக்கானார்.

இவரின் பெயர் சிவசிதம்பரம் - நடராசா வயது 68.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது. முல்லை மாவட்ட வைத்தியசாலையில் இவர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-92)

## தெற்கில் நிலக்கண்ணி மீட்பு! பயங்கர கொலையாளி கைது!!

தென்பகுதியில் ஊருபொக்க என்னுமிடத்தில் சடந்த வெள்ளிக்கிழமை இரண்டு கிலோ எடையுள்ள நிலக்கண்ணி ஒன்றை பாதுகாப்பு படையினர் மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்தினர். அச்சமயம் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் நிச்சா என்ற தீவிரவாத நபர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டைரியில் தீவிரவாத சம்பவங்கள் பல வெளியாகினவாம்.

இறந்த நிச்சா என்பவர் 38 கொலைச் சம்பவங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பது அந்த 'டைரி' மூலம் தெரியவந்தது. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனக்கு

நல்ல நிலையில் உள்ள லான்சர் ஹொண்டா (Lancer Honda) C 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 15, சென். பீற்றேஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி வீதி, அடைக்கல மாதா கோயிலுக்கு சமீபமாக) (சி-4523)

1½ மாதம் நிரம்பிய, நல்ல இன கறுப்பு மண்ணிற அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி அகற்றப்பட்டது. தொடர்பு:- அரியரெத்தினம், மார்க்கெற் றோட் [பேக்கரி முன்பாக], கொக்குவில் மேற்கு (3480)

நல்ல இன பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. சிவஐங்கரன், விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3481)

Honda CD 50 கோல்ட் லைன் C 50 Chaly புதியவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கு. சுதர்சன் இல 9/6 மலர்மகள் வீதி மாம்பழம் சந்திக்கு அருகில் அரியாலை யாழ்ப்பாணம். (13222)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீற்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

வெள்ளை இன பொம்மனேரியன்நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு! 113, (30) கன்னாதிட்டி யாழ்ப்பாணம். [13232]

### FOR SALE

Theodolites & Levels, Kern T. 16 அளவைக் கருவி, Automatic Levels (Wild, Nikon) விற்பனைக்குண்டு தொடர்பு: T. சபாரட்ணம் மடத்தடி, தெல்லிப்பளை. (3477)

Farfisa Five Octave Electric Organ with Foot Volume Control Stand and Full Orchestral Accompaniment Going Cheap 59,(101) Temple Road, Jaffna. (13223)

### தேவை

பிரபல மருந்துக் கடை ஒன்றிற்கு மருந்து விற்பனையாளர் தேவை, 28/5/90 இற்கு முன் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம், மாதசர எல்லைக்குள் வசித்தல் என்பன விரும்பத் தக்கது இல. 700 C/Oஉதயன். (3483)

மொத்தக் கொள்வனவுக்கு கந்தமட்டைகள் தேவை விலை, விபரம் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும் No:702 C/o உதயன். (3489)

பழைய பேப்பர் கொப்பி, புத்தகம், சோதனைப் பேப்பர், சிமெந்த் பாக் தேவை. தொடர்பு கொள்ளவும் அண்ணா தொழிலகம், இணுவில் (சி-5041)

ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல புலமையும் Accounts (கணக்கியல்) ஆங்கில, தமிழ் தட்டச்சு (Typing) வேலையில் நல்ல அனுபவம் உள்ள ஆண், பெண் கணக்காளர் தேவை. யாழ் மாநகர சபைக்கு அண்மையில் உள்ளவர்கள் மட்டும் நற்சான்றுப் பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3486)

அச்சக வேலை பயில்வதற்கு படித்த பெண்கள் பிள்ளைகள் தேவை. யாழ் மாநகர சபைக்கு அண்மையில் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (3485)

விறகு கொத்துவதற்கு ஆட்கள் தேவை கூலி அதிகரிக்கப்பட்டுள்ளது. 3 நேரம் தேநீரும் வழங்கப்படும் தம்பிஐயா விறகுகாலை, 46, பிரப்பங்குளம் ஒழுங்கை வண்ணார்பண்ணை. (13230)

### வகுப்புக்கள்

O/L 1990 கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ஆண்டு 5, புலமைப்பரீட்சைக்கும் விசேட கவனிப்புடன் B,SC பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி திருநெல்வேலி. (349)

### மணமகன் தேவை

சைவ போசனமுடைய 29 வயது அழகான செவ்வாய்க் குற்றமற்ற B.sc பட்டதாரி ஆசிரியைக்கு உயர்ந்த உத்தியோகம்பார்க்கும் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: இல. 701 C/o உதயன். (3487)

### மணப்பெண் தேவை

லண்டனில் நிரந்தர வேலை செய்து மாதம் 2500 பவுண் உழைக்கும் 42 வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை. எம்மிடம் எல்லாக் கோணங்களிலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (13220)

### வாடகைக்கு வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அல்லது கொக்குவில், கோண்டாவில் பகுதியில் சகல வசதிகளும் உடைய வீடுதேவை உடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீலஷ்மி அச்சகம், 222 [76], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் நேரம் பிற்பகல் 2 00 — 4.00 (3488)

### மணமகள் தேவை

கனடாவில் நிரந்தரமாக வசிப்பவரும், விவாகரத்துச் செய்தவரும் வேளாள கத்தோலிக்கரும் இரு பிள்ளைகளின் தந்தையும் 42 வயதுடைய ஒருவருக்கு கல்யாணமாகாத அல்லதுவிதவையான ஏறக்குறைய 35 வயதுடைய கத்தோலிக்க அல்லது இந்து வேளாள குல மணமகள் தேவை. கனடா செல்ல வேண்டும். விபரங்களுடன் 22- 05- 90க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். C/o உதயன் 123. [13082]

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும். நாடுங்கள் FUDO39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில். (C4362)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39 / 17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C / 4361)

### தொழில் கல்வி

Radio Officers (Ship) P.M.G. Telex Operators (International) இருபாலாரும் Airconditioning And Refrigeration, Electronics. (City & Guilds) London வெளிநாடுகளில் பிரபல்யமானவை. சான்றிதழ் வழங்கப்படும் ஆரம்பம் 2-6-90 Nesta Technical Institute 59. Station Road. Jaffna. (13098)

### வரலாறு

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது!! வரலாறு- ஆண்டு 6; வரலாறு- ஆண்டு 11 ஆக்கியோன்:- ந. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3479)

### திருமண அழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிஸைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்- புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம் (C/5033)

## நகரசபை, வவுனியா
# கேள்வி விளம்பரம்

### நவீன சந்தைக் கட்டட மீளமைப்புக்கான வேலை, கட்டடம் 1, 11


மேற்படி விடயம் சம்பந்தமான 25 04. 1990 ஆம் திகதிய கேள்வி விளம்பரம் தொடர்பான முடிவு திகதிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு பின்போடப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கும் திகதி: 11. 06. 1990 ந.ப. 12.00
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி; 14. 06. 1990 பி.ப. 2.00

செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா. 17 05 1990 (சி-4527)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**பொ. சிவஞானசுந்தரம்**
(கப்டன் ரமேஸ்மாஸ்டர்)

தோற்றம்: 25- 08 - 1961 மறைவு: 20 - 05 - 1988

பாசத்தின் பிறப்பிடமே பண்பின் உறைவிடமே நெஞ்சம் நிறைந்தவனாய் சமூகத்தின்சேவகனாய் விளையாட்டு வீரனாய் புரட்சிக்கலைஞனாய் ஒளிர்ந்தவனே காலம் சுமத்திய வரலாற்றுக் கடமைக்காய் காலத்தை வென்று காவியமானவனே அஞ்சலிப் பூக்களைத் தூவி அர்ச்சிக்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

பொலிகண்டி. (3065)

# காயத்திரி சென்ரர்

உங்களுக்குத் தேவையான தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் பெருப்பித்தல் (Enlargement) சிறுப்பித்தல் (Reduction) முதலான சகல வேலைகளும், ஆங்கிலத் தட்டச்சு (English Typing) செய்து கொடுக்கப்படும்.

**Gayathiri Centre**
Jaffna Road,
"Povangiri" Valvettiturai.
[3588]

# Walk in Interview

Our client in Colombo requires a Manager for its branch office in Jaffna. Those who are below fifty years with ten years experience in a private sector preferable. Meet the Office Manager on week Days between 1 p.m. to 4 p.m.

Accounting Systems & Services (Jaffna) Ltd.,
Ceylon Merchants Building,
1st Floor,
484/1, Hospital Road,
Jaffna.

[13236]

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளப் பிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**மத்திம அளவிலான வேலைகள்**

1. மருதங்குள புனருத்தாரண வேலைகள்

**சிறிய அளவிலான வேலைகள்**

1. வவுனிக்குளக் கட்டிற்கு கிரவல் அடித்தல்
2. அம்பலப் பெருமாள், தென்னியன்குளம் வீதிக்கு கிரவல் அடித்தல்.

மத்திம அளவிலான வேலைக்குரிய கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணியாளரினால் 08 - 05 - 90 தொடக்கம் 12 - 06 - 90 வரை விநியோகிக்கப்பட்டு 14 - 06 - 90 மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சிறிய அளவிலான வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 08 - 05 - 90 முதல் 06 - 06 - 90 வரை விநியோகிக்கப்பட்டு, 07 - 06 - 90 மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

எந்திரி. ஏ. சி. வினோதராஜ்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனிக்குளம்.

நீர்ப்பாசனப் பணியகம்,
வவுனிக்குளம்.
1990 - 05 - 07 [சி-4514]

# 45ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி பூவிலிங்கம் தங்கரத்தினம்**

தோற்றம்: 10-09-1923 மறைவு. 07-04-1990

ஊற்றுதய மாகுமலை தானுயரு மண்ணில் நேற்றுவரை வீற்றிருந்த வாழ்வுபுகழ் செல்வம் காற்றிடையிலே வீழ்ந்த கடற்படகுமாச்சே ஆற்றுவதார் எம்துயரை அன்புத்தாயே!

அன்புக்கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

இல: 03, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (3630)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க
முன்னாள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி
லெப்டினன் கேர்ணல்
ராதா [க. ஹரிச்சந்திரா]
அவர்களின்


# 3வது ஆண்டு நினைவஞ்சலி



தமிழினத்தின் விடிவுக்காய் தன்னுயிர்களை
தமிழீழ மண்ணுக்கே அர்ப்பணித்தவர்களுள்
தமிழ்ப் பற்றும் தமிழினப் பற்றும் கொண்டவனாய்
தன்மானத்துடன் விளங்கியவர்களுள் ஒருவனாய்
வீரதீரச் செயல்கள் பல புரிந்த ராதாவே!
உன் பூதவுடல் அழிந்தாலும் உனது புகழுடம்பு
தமிழீழத்தில் ஒரு தமிழ்மகன் இருக்கும் வரை
நீடித்து நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.
கடமை வீரனாய் காரியங்கள் பல படைத்தோன்
தன்மான உணர்வோடு தமிழீழக் கனவோடும்
போராட்டத் தீயில் புகுத்தவர்களுள் நீயும் ஒருவன்
ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆக்கிரமிப்பாளர்களின்
அட்டகாசங்கள் தமிழீழ மண்ணில் குறையவில்லை
ஆண்ட பரம்பரை மீண்டும் ஆளுவதற்கு ஓர்
அரியகாலம் வந்துவிட்டதே என்று நாம்
பெருமை கொள்வோம்.

இங்ஙனம்:
தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர்
வண்ணார்பண்ணை வாழ் மக்கள்,
பெற்றோர், உற்றார், உறவினர்கள்.
(சி-4528)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



இணுவில் கிழக்கு
**அமரர் கந்தையா அம்பலவாணர்**
[இராசா]
நொத்தாரிஸ் லிகிதர்)

தோற்றம்: 20 - 03 - 1907 மறைவு: 21 - 04 - 1990

திங்கட்கிழமை (21-05-90) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம். 22-04-90 இல் நடைபெற்ற ஈமச்சடங்கின் போது கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
மனைவி அ. சின்னப்பிள்ளை, மகள்,
மருமகன் திரு. திருமதி, இரகுபதி,
மகன், மருமகள் திரு. திருமதி, அருள்நாதன்.
''தேவி இல்லம்''
இணுவில் கிழக்கு,
இணுவில். (3602)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

**பொருள்:**

மடலேறுதலோடு மாலைக் காலத்தில் வருந்தும் துயரத்தை மாலைபோல் தொடர்ந்த சிறு வளையல் அணிந்த காதலி எனக்குத் தந்தாள்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.　தொலைபேசி: 2288
20 - 05 - 1990　த. பெ இலக்கம் 25


# உள்ளூராட்சி மன்றங்களை முடமாக்கும் முயற்சி வேண்டாம்

வடக்கு - கிழக்குப் பகுதியில் உள்ளூராட்சி மன்றங்கள் செயலிழந்து ஸ்தம்பிதம் அடையும் ஆபத்தான நிலை உருவாகி உள்ளது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு, சிற்றூழியர்கள் மட்டத்தில் ஆட்களை நியமனம் செய்வதற்கு இதுவரை பிரதேச சபைகள், மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளர்களுக்கு இருந்த அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டது. அதுவே உள்ளூராட்சி மன்றங்கள் தமது சேவைகளைச் செய்யமுடியாமல் கஷ்டப்படுவதற்கும் அவை செயல் இழந்து போகும் அபாய நிலை தோன்றியுள்ளதற்கும் காரணம் எனவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் சிற்றூழியர்கள், தமது பதவிகளை விட்டு விலகிச் செல்கிறார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பு வசதிகள் அதற்குப் பிரதான காரணம். அவர்களின் இடங்களுக்குப் பதிலாட்களை நியமிக்க முடியவில்லை. அதனால் மக்களின் அத்தியாவசிய சேவைகள் சுகாதார வேலைகள், மின்சார விநியோக வேலைகள், வீதிகள் திருத்தல், சுத்தி செய்தல் போன்ற வேலைகள் என்பன பாதிக்கப் படுகின்றன. பற்றாக் குறையான ஊழியர்களை வைத்துக் கொண்டு மக்களுக்கு வேண்டிய சேவைகளை எப்படிச் செய்வது என்று தெரியாமல் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகிகள் திண்டாடுகின்றார்கள்.

இது இப்படியே தொடர்ந்தால், பாதிக்கப்பட இருப்பவர்கள் மக்கள்தான். தமிழ்ப் பிரதேசங்களின் கிராமப் பகுதி மக்களுக்கே அதிகம் பாதிப்பு ஏற்பட இருக்கிறது. இதன் விளைவு, பக்கவிளைவு, பின்விளைவு என்பன தமிழ்மக்களைப் பல வழிகளிலும் பல துறைகளிலும் பெருமளவில் பாதிக்கும்.

இத்தனைக்கும் சிற்றூழியர்கள், பதிலாட்களை நியமிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளர்களுக்கு இருந்த அதிகாரங்களைப் பறித்தது கொழும்பில் உள்ள மத்திய அரசல்ல; வட-கிழக்கு மாகாண சபை தான்!

வட-கிழக்கு மாகாண அரசின் உள்ளூராட்சித் திணைக்களம் தனது 27-09-1989 ஆம் ஆண்டின் 12/89 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தின் மூலம் விசேட ஆணையாளர்களின் பதிலாட்களை நியமிக்கும் அதிகாரத்தைப் பறித்து விட்டது.!!

இதனை, அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கும் தன்மையுடன் ஒப்பிடுவதா? அல்லது குரங்கின் கைப்பட்ட பூமாலை என்று சொல்வதா?

ஆட்சி அதிகாரம் கொழும்பிலிருந்து மாகாணங்கள் மாவட்டங்கள், நகரங்கள், குறிச்சிகள் என்று அடிமட்டத்துக்கு வந்தால் தான் உண்மையான மக்கள் ஆட்சி மலர முடியும், நாட்டில் பொருளாதார, சமூக மறுமலர்ச்சி ஏற்பட முடியும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. சரியான கோட்பாடும் அதுவே.

அதனை உணராது மாகாணசபை அதிகாரிகள், கொழும்பு வழங்கிய முழு அதிகாரத்தையும் தாம் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க முயல்வது முட்டாள்தனம். கண்டிக்கப்பட வேண்டியது. மாவட்ட நகர கிராம மட்டங்களில் உள்ள பொறுப்பான உத்தியோகத்தருக்குப் புதிதாகப் பல அதிகாரங்களை வழங்கி தமிழ்ப் பிரதேசங்களை முன்னேற்றுவதற்குப் பதில், அடிமட்ட உத்தியோகத்தரிடம் இருந்த அடிமட்ட அதிகாரங்களையும் தட்டிப் பறிப்பது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சு என்ன, திணைக்களம் என்ன வேறு எந்த அமைச்சோ திணைக்களமோ அடிமட்டத்தினர் அதிகாரங்களைப் பறிக்க இடம் கொடுக்க முடியாது. இது தமிழ்ப் பிரதேசங்கள் மேலும் பின்னடைய வழி செய்யும்.

கிராமம் என்றாலும் சரி, நகரம் என்றாலும் சரி, மாவட்டம் என்றாலும் சரி, அந்தந்தப் பகுதி மக்களின் நலனை முன்னிறுத்தி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற இலக்குடன் அந்தப் பகுதியை முன்னேற்ற வேண்டும் என்ற முன்யோசனையுடன், அந்தந்தப் பிரதேசத்தின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்படக் கூடியதாக அதிகார வரம்புகள் வகுக்கப்பட வேண்டும். இயலுமானவரை நிர்வாக அதிகாரங்களைப் பரவல் செய்ய வேண்டும்.

அதிகாரத்தைச் சரிவரப் பயன்படுத்தாதவரை, துஷ்பிரயோகம் செய்பவரைத் தண்டிப்பது வேறு. அவர்களிடமிருந்து அதிகாரங்களைப் பறித்து முடமாக்கிவிடுவது வேறு. நிர்வாக அதிகாரிகளை முடமாக்க முயற்சித்தால் மக்கள் சேவை, நலன், முன்னேற்றம் எல்லாமே முற்றுமுழுதாக முடமாகிப் பாதிப்புற்றுவிடும், அது நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பானது.

தமிழ்ப் பிரதேசங்களின் நிர்வாகக் கட்டமைப்பையும் மக்களின் சமூக வளர்ச்சியையும் இடம் தெரியாமல் பொசுக்கிவிடும். எனவே இது விடயத்தில் மறுபரிசீலனையும், பார்வை மாற்றமும் தேவை என எச்சரிக்கும் கடமை எமக்கு உண்டு.

## விவசாயபீடம் பற்றி கூட்டம் நாளை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இயக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயும் கூட்டம் ஒன்று நாளை 21 ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெற இருக்கிறது.

இந்தப் பீடத்துக்குஇரண்டு

(7ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகருக்கு எதிராக நடவடிக்கை

தற்போதுள்ள ஒரு சூழ் நிலையைப் பயன்படுத்தி பாவனைப்படுத்தி பொருள்களை அதிககாலம் வைத்து விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராககடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப்புலிகள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்

கடைகளில் விற்கப்படும் பொருள்களுக்கான விலைப் பட்டியல்கண்டிப்பாகவைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்ட விலைகளுக்கு அதிகமாக விற்பனை செய்யக் கூடாது என்ற விதிகள் உடனடியாக அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளிரவைக்கப்பட்ட போத்தல்களில் அடைக்கப்பட்ட பானங்கள், சிகரெட் என்பன இவற்றில் முக்கியமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-164)

## புதிய கட்டடம்

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரிக்கு 8 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (72)

## பொருட்காட்சி

கோப்பாய் விவசாயிகள் கழகம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தில் பொருட்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது. மாலையில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (72)

# தென்மராட்சிப் பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை

## மிருசுவிலில் வற்றாத நன்னீர் கிணறு மூலம் தீர்க்குமாறு அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம் மே 20

மிருசுவிலில் உள்ள வற்றாத நன்நீர் கிணற்றில் இருந்து பாரிய நீர்த்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி தென்மராட்சிப் பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும்படி அப் பகுதி மக்கள் யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிக்கு நேரடி விஜயம் செய்த அரச அதிபர், கொடிகாமம் நடமாடும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வைத்து பொதுமக்களைச் சந்தித்தார்.

அந்த நேரம் அவர்கள் சமர்ப்பித்த கோரிக்கை வருமாறு:

நிலாவரையில் உள்ள நீர் வற்றாத கிணறு மூலம் பாரிய நீர் விநியோகம் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று மிருசுவிலிலும் நீர்வற்றாத கிணறு உண்டு அதில் இருந்து விவசாயத்துக்கும், மக்கள் குடிதண்ணீருக்கும் திட்டம் ஒன்று வகுத்து உதவ வேண்டும்.

இப்படிக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## பல்கலை கழகத்துக்கு அமெ: புத்தகம்

யாழ்ப்பாணம் மே 20

அமெரிக்க தகவல் சேவையினர் விலை உயர்ந்த 75 புத்தகங்களை எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்- பல்கலைக்கழகத்துக்கு வழங்க இருக்கின்றனர்.

அந்தச் சேவையைச் சேர்ந்த திரு. றோஸ், திரு. திஸ்ஸஜெயதிலகா, திரு. தம்பிராசா ஆகியோர் நேரடியாக வந்து இந்தப் புத்தகங்களைக் கையளிக்க உள்ளனர்.

இந்த சேவையினர் அன்று நாவலர் மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றையும் நடத்த இருக்கின்றனர். (இ-3)

## குறைந்த செலவில் வீடுகள் அமைப்பது பற்றி கருத்தரங்கு

காங்கேசன்துறை மே 20

குறைந்த செலவிலான வீடு அமைப்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று 22 ஆம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ' சங்கம் மண்டபத்தில் நடைபெறும்:

வலி. வடக்கு வீடமைப்பு கூட்டுறவுச்சங்கம், லங்கா சிமெந்துலிமிட்டெட், பொறியியலாளர் நிறுவனம் ஆகியன இணைந்து இக்கருத்தரங்கை நடத்துகின்றன.

கருத்தரங்கு பொது நல சேவா சங்க பிரதி நிதிகளும், பொதுமக்களும் அழைக்கப்படுவர்.

குறைந்த செலவில் வீடுகளை அமைப்பது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகள் அவர்களுக்கு வழங்கப்படும். (இ-68)

## வவுனியா ஆஸ்பத்திரி நிலை

வவுனியா மே 20

வவுனியா ஆதாரவைத்திய சாலையில் உள்ள வைத்திய ஆய்வுகூடத்தில் தொழில் நுட்பவியலாளர் பற்றாக் குறை காரணமா, நோயாளிகளும், வைத்தியர்களும்பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

இருவர் பணிபுரிந்து வந்த இவ் ஆய்வு கூடத்தில் ஒருவர் மட்டுமே பணிபுரிகின்றார் இவர் அவசர காரியங்களாக லீவில் செல்லும் போது மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ளவோ, அதன் மூலம் நோயாளிகளின் நோய்களை இனங்கண்டறியவோ முடியாமல் உள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (இ-167)

## அரச அதிபரிடம் 12 கோரிக்கை

சாவகச்சேரி, மே 20

யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அண்மையில் சாவகச்சேரி உதவி அரச அதிபர் செயலகத்துக்கு உத்தியோக பூர்வமாக வருகைதந்த போது கிராம சேவையாளர் சங்கம் உதவி அரச அதிபர் மூலமாக 12 கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது.

இக்கிராம சேவையாளர்கள் தமக்கான சம்பள முற்பணக் கொடுப்பனவுகள், சம்பள அதிகரிப்பு, வாகன வசதி, அலுவலகப்படி என்பன தொடர்பானகுறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென யாழ், மாவட்ட அரச அதிபரிடம் இக்கோரிக்கைகள் மூலம் கேட்டிருந்தனர். (ப-31)

## புனர்வாழ்வு நடவடிக்கை: தடையாக இருப்பவை பற்றி செயலகமாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே. 20

புனர்வாழ்வு வேலைகளுக்கு தடையாக இருந்து வரும் மணல், கல், மரம் போன்றவற்றை பெறுவது சம்பந்தமாக யாழ்- செயலகத்தில் நடந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக், முன்னணிப் பிரமுகர் திரு. ராஜன், திரு. ரவி ஆகியோர் உட்பட திணைக்களப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

புனர்வாழ்வு வேலைகளுக்கு தடையாக இருந்து வரும் கல், மண், மரம் ஆகியவற்றைப் பெறும் வழிமுறைகள் பற்றியே முக்கியமாக ஆராயப்பட்டது.

அத்துடன் யாழ் குடாநாடெங்கிலும் மரம் நடும் இயக்கம் ஒன்றை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

## புங்குடுதீவைச் சேர்ந்த வசதிகுறைந்த மாணவருக்கு கல்விப் புலமை உதவி நிதி

புங்குடுதீவை பிறப்பிடமாகக்கொண்ட வசதி குறைந்தமாணவனுக்குகல்விப் புலமை உதவிநிதி வழங்க பதுளை ஆர். வைத்தியலிங்கம் அறநிதி முன்வந்துள்ளது.

வைத்தியம், பொறியியல், கட்டடக்கலை, சட்டம், வர்த்தகம், விவசாயம், சங்கீதம் ஆகிய துறைகளில் எவற்றுக்காக வேனும் இலங்கையில் அல்லது இந்தியாவில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம், நிறுவகம், கல்லூரி எவற்றிலாவது கல்வி பயில உதவி வழங்கப்படும்.

1989/90 ஆம் ஆண்டின் போது முதலாம் ஆண்டுக் கற்கைக்கு அனுமதி பெறும் மாணவராகஇருக்கவேண்டும்.

இந்த உதவிபெறும் மாணவர் பட்டப்படிப்பை முடித்து வருவாய் தரும் தொழிலில் ஈடுபட்டபின் உதவி நிதியை தவணை அடிப்படையில் திருப்பிச்செலுத்த வேண்டும்.

இந்த நிதிபெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரைபெறலாம் என்றும், விண்ணப்ப முடிவு திகதி ஜுலை 31 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வெளிநாட்டுத் தமிழரின் பணத்தை விழுங்கும்வங்கிகள்!

யாழ்ப்பாணம் மே20

வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள், தமது உறவினர்களின் திருமண வீடு, பிறந்தநாள் போன்ற வைபவங்களுக்கென அனுப்பும் பணத்தில் பெரும் பகுதியை வெளிநாட்டு வங்கிகள் ''விழுங்கிவிடுகின்றன!

அதனால் பாவம், இங்குள்ள உறவினர்களுக்கு, சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முற்காற்பணம் என்று சிறு தொகையே கைக்கு வந்து கிடைக்கிறது!!

பணம் அனுப்புவதற்கான ''றெலெக்ஸ்'' கட்டணம் என்று கூறி அனுப்பப்படும் சுமாரான தொகையில் முக்கால் வீதம் வெளிநாட்டு வங்கிகளால் அறவிடப்படுகின்றன.

உள்நாட்டு வங்கிகளோ றெலக்ஸ் கட்டணமாகச் சில நூறுரூபாய்களை மட்டுமே அறவிட்டு வருகின்றன என அறிய வருகின்றது.

ஆனால் வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் வெளிநாட்டு வங்கிகள் மீதே மோகம் கொண்டு தமது பணத்தை வீணாக்குகின்றனர்!

அண்மையில் நடந்த் சம்பவம் ஒன்று:-

ஒருவர் ஜேர்மனியிலிருந்து யாழ் நகரில் உள்ள தமது உறவினர்களுக்கு வெளிநாட்டு வங்கி ஒன்றினூடாக 200 டொச் மார்க்கை அனுப்பி வைத்தார். இது இங்கு சுமார் 4 ஆயிரம் ரூபா பெறுமதியானது. ஆகும்.

ஆனால் சம்பந்தப்பட்ட வங்கி 2ஆயிரம் ரூபாவை கமிஷன், றெலக்ஸ் கட்டணம் எனப் பெற்றுக் கொண்டிருக்கிறது!

இதே போல அண்மையில் 100 டொச் மார்க் (இலங்கை நாணயத்தில் 2,300ரூபா) அனுப்பியவருக்கும் இ[illegible] (2000) [illegible] 300 ரூபாவே இங்கு கிடைத்தது. (அ-9)

## இணைப்புக் குழு கூட்டம்

மாவட்ட புனரமைப்பு இணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

இதற்கான அறிவித்தலை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், புனரமைப்பு குழுத் தலைவருமான திரு. அன்ரன் அல்பிரட் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்கள, கூட்டுத்தாபனங்களினதும் உயரதிகாரிகள் இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-9)

### சமய சிந்தனைகளில்

## வருடாந்த உற்சவம்

பிரசித்தி பெற்ற சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள்திருவிழா நடை பெற்று ஜூன் மாதம்7திகதிமாலை 2 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 8ஆம் திகதி காலை 9 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைறெும். (இ-3)

## டீசல் தட்டுப்பாடு

ஒட்டுசுட்டான் மே 20

முலலைத்தீவுப் பகுதியில் டீசலுக்கு அடிக்கடி பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு தண்ணீரூற்று ஆகிய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுச்கு வரும் டீசல் மறுநாளே பெற்றுக் கொள்ள முடியாமல் மறைந்து விடுகிறது.

இதே வேளை அயல் கிராமங்களிலுள்ள கறுப்புச்சந்தையில் ஒரு லீற்றர் டீசல் 12 ரூபாவாக விற்பனையாகின்றது. (க-113)

## 6துறைகளில் பயிற்சி பெற வெற்றிடம்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்- கல்வி அலுவலக முறைசாராப் பிரிவில் ஆறு துறைகளில்பயிற்சிபெற வெற்றிடங்கள்உள்ளன. சேரவிருப்பமானவர்கள் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

வெல்டிங், மோட்டார் வாகனம் திருத்தல், மின் இணைப்பு, புத்தகம் கட்டுதல், பட்டுத்திரை அச்சிடல், தோல்பொருள் உற்பத்தி ஆகியவையே இந்த ஆறு துறைகளும் ஆகும்.

இவற்றில் சேர்ந்து பயிற்சி பெற விரும்புகிறவர்கள் முறைசாராப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.(இ-3)

### வாசகர் திருமுகம்

## நிரந்தர மருத்துவ மாது

முல்லைத்தீவு செல்லபுரத்தில் உள்ள சுகாதார நிலையத்தில் நிரந்தரமாக மருத்துவ மாது இல்லாமையால் மக்கள் பாதிப்படைகின்றனர். மருத்துவ மாதை நியமித்துத்தரும்படி எமது சங்கம் 07-12-88 ஆம் திகதி முல்லைத்தீவு அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கேட்டிருந்தது.

அரசாங்க அதிபர் 14-12-88 ஆம் திகதி கொண்ட E/4/1/23/(ii) கடித மூலம் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவித்து உடனடியாக நியமனம் பெற்ற மருத்துவ மாதை கடமையில் அமர்த்தும்படி கேட்டிருந்தார்.

ஆனால் இன்றுவரை பேற்படி சுகாதார நிலையம் இயங்கவுமில்லை, மருத்துவ மாதுமில்லை. வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் (R. D. H. S.) இதில் கவனம் எடுப்பாரா?

சு. பொன்னுசுவாமி,
செயலாளர்,
விடமைப்பு அபிவிருத்திச் சங்கம்,
செல்வபுரம்,
முல்லைத்தீவு.

## ரயில்வேகடவை பாதுகாவலர் பரிதாபநிலை

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் எங்களை ரயில்வேக் கடவை பாதுகாவலராக வேலைக்கு அமர்த்தினார்கள். ஆறுமாத காலத்துக்குள் நாங்கள் நிரந்தரமாக்கப்படுவோம் என்று கூறினார்கள். இதனை நம்பி முன்பு செய்த தொழிலையும் கைவிட்டு இப்பொழுது 1000 ரூபாவை மட்டுமே சம்பளமாகப் பெறுகின்றோம். இதைத் தவிர வேறு எதுவித விசேஷ படிகளும் வழங்கப் படவில்லை.

இத் தொழிலில் கடமையாற்றுபவர்கள் பெரும்பாலும் குடும்பப் பொறுப்புடையவர்களே. வறுமை ஒழிப்புத் திட்டம் எங்களை மேலும் வறியவராக்கும் திட்டமாகவே அமைந்துள்ளது. சிங்களப் பிரதேசத்தில் இன்னமும் உணவு முத்திரை வழங்கப்படுகிறது. எமக்கு மட்டும் இன்னும் ஏன் இந்தப் பாரபட்சம். சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனத்தில் எடுப்பார்களா?

திருச்செல்வம்,
புங்கன்குளம்.

## சட்டவிரோத மின்பாவனை முற்றாகத் தடை

அச்சுதேலி மே 20

சுன்னாகப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டவர்களின்மின்இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு மின் இணைப்புக்கு பயன்படுத்தப்பட்ட வயர்கள்அகற்றப்பட்டுள்ளன (க-11)

## கண்டதும் கேட்டதும்

வடக்கு - கிழக்கில் தற்கொலை செய்பவர்கள் பயன்படுத்துவதில் முதல் இடத்தை வகிப்பது அலரிக்காய். அலரிக்காயை பறவைகள், குரங்கு என்பனவும் தின்கின்றன. ஆனால் விதையை அவை தின்பதில்லை விதையிலேயே நச்சுத் தன்மை இருக்கிறது.

அலரிக்காயைத் தின்னும் குரங்குகள் விதையை எறிந்துவிட்டுச் செல்வதை காட்டுப் பகுதிகளில் காணலாம். ஆனால் மனிதன் அதனை அப்படியே உட்கொண்டு இறக்கிறான்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுப் பகுதியிலும், வன்னிமாவட்டத்திலும், முல்லைத்தீவு, மன்னார், செட்டிக்குளம் ஆகிய பகுதிகளிலும் இந்த அலரி விதை சாப்பிட்டு சமீபநாட்களில் 50க்கும் மேற்பட்டவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர் என்று தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

எமது மக்கள் தன்னம்பிக்கை அற்றுக் கணநேரத்தில் தம் வாழ்வை முடிக்கும் அலரி மரத்தை ஏன் வளர்க்கவேண்டும்?

-- செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலத் தட்டெழுத்தாளர் தேவை

சிறந்த ஆங்கில அறிவும், அனுபவமும் உள்ள பெண் தட்டெழுத்தாளர் தேவை. 22-05-1990 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். ''கிளீன் கட்'' இல 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[3573]



## 'M' THREE TRAVELS

வழங்கும்

மாலைதீவு, சவூதி அரேபியா

பிரயாணங்கள்

### மாலைதீவு (Maldives)

VACANCY

1. Maldives Construction Work (மாலைதீவு கட்டிட சகலதொழிலாளர்களும்) —

### சவூதி அரேபியா (Saudi Arabia)

| | | |
|---|---|---|
| 1. | House Maids (வீட்டுப் பணிப்பெண்கள்) ... | — |
| 2. | House Drivers (வீட்டுச் சாரதி) 40 வயதிற்கு மேற்பட்டவர்கள்) ... | 2 |
| 3. | Cleaners (சுத்திகரிப்பாளர் மிக விரைவில் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்) ... | 50 |
| 4. | Executive Secretary (நிர்வாக காரியதரிசி) ... | 2 |
| 5. | Accountant ... | 2 |
| 6. | Chartered Accountant ... | 2 |
| 7. | Auto Mechanic ... | 20 |
| 8. | Diesel Mechanic ... | 10 |
| 9. | Radio Technician ... | 10 |
| 10. | 1st Class Cook ... | 20 |
| 11. | Cook [Western] ... | 20 |
| 12. | Waiters ... | 16 |

★ 4 — 12 வரையிலான வெற்றிடங்களுக்கான சம்பள விபரம் நேர்முகப் பரீட்சையில் தெரிவிக்கப்படும்.

★ PASS PORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ நம்பிக்கை, நாணயம் என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய தாபனம்.

## 'M' THREE TRAVELS

தலைமை அலுவலகம்: இந்திர பவனம் சோதி வீதி, காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்: இல. 1, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி 5050]



## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையில் கல்வி உத்தியோகத்தர் பதவியும், லிகிதர் பதவியும், வெற்றிடமாகவுள்ளது. கீழ்க்காணும் தகைமையுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர், மாவட்ட கூட்டுறவுச் சபை, கணேசபுரம் கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு பதிவுத்தாபல் மூலம் 31-05-90ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும. விண்ணப்பத்தின் இடது பக்கமேல் மூலையில் பதவி நாமம் குறிப்பிடவும்.

**கல்வி உத்தியோகத்தர்:**

சம்பள அளவுத்திட்டம்:

1005 — 1705

40X5 — 50X10

(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கமைய படிகள் வழங்கப்படும்)

**வயது 25 தொடக்கம் 40 வரை**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 9ஆம் சம்பளத்திட்டத்தில் உறுப்பினர் தொடர்பு பயிற்சியளித்தல் பற்றிய மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு சங்க ஊழியர் 10ஆம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்துடன் கூட்டுறவு தராதரப்பத்திர உயர் பிரிவுச் சித்தியுடன், க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவரும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கூட்டுறவு/சமுதாய அபிவிருத்தி பற்றிய பாடநெறி ஒன்றைப் பயின்றிருத்தல் பற்றிய விசேட கவனம் செலுத்தப்படும்.

**லிகிதர்:**

சம்பள அளவுத்திட்டம்:

700 — 1025

20X10—25X5

**வயது 25 தொடக்கம் 40 வரை**

**தகமைகள்:-**

கல்விப் பொதுத் தராதர சாதாரணத்தில் ஆறு பாடங்கள் சித்தியுடன்.
தமிழ் தட்டச்சு தெரிந்தவராக இருத்தல் வேண்டும்
கூட்டுறவு அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாவட்டச்செயலாளர்

(சி/4552)


★ கொன்றா கிளர்ச்சியாளரின்

# ஆயுத ஒப்படைப்பு இடைநிறுத்தம்; நிக்கரகுவாவில் சிவில்யுத்த நிலை!

## ஜனாதிபதி ஷாமொறா ஒற்றேகா கருத்து மோதல்

மனகுவா, மே 19

ஐ.நா. விடம் ஆயுதங்களை ஒப்படைப்பதை கொன்றா கிளர்ச்சி அமைப்பு காலவரையின்றி இடைநிறுத்தம் செய்துவைத்துள்ளது.

இதற்கான உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றை கொன்றா கிளர்ச்சி அமைப்பின் தலைவர் நேற்று வெளியிட்டார்.

ஏற்கனவே நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதிவயலெற்றா ஷாமொறாவுடன் செய்து கொண்ட உடன்பாட்டின்படி எதிர்வரும் ஜுன் பத்தாம் திகதிக்கு முன்னர் கொன்றா கிளர்ச்சியாளர் அனைவரும் ஐ.நா. குழுவிடம் ஆயுதங்களை ஒப்படைத்துகொன்றா அமைப்பையும் கலைத்துவிடவேண்டும் என்று இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதன்படி 12 ஆயிரம் கொன்றா வீரர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் ஆனால் இதுவரை 800 வீரர்களே ஆயுதங்களைஒப்படைத்தனர்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற ஜெனரல் ஒற்றேகாதலைமையிலான சன்டினிஸ்டாவிடுதலைமுன்னணியினர் ஷாமொறாவின் அரசுக்குநிர்பந்தம் கொடுத்துவருவதாகவும் அதனால் ஆயுதக்கையளிப்புஅமைப்புக் கலைப்பு அனைத்தையும் காலவரையின்றி இடைநிறுத்தம் செய்யவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் கொன்றா அறிவித்துள்ளது.

இதனிடையில்- நிக்கரகுவாவில் சிவில் யுத்தம் ஏற்படும் நிலைமை தோன்றி இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி ஒற்றேகா எச்சரித்திருக்கிறார்

ஜனாதிபதி ஷாமொறா சர்வாதிகாரி போல் நடப்பதாக ஜெனரல்ஒற்றேகா குற்றஞ்சாட்டினார். (எ)

★ புயல் நிவாரண நிதிக்காக

## முன்னாள் முதல்வர்ராமராவ் நாடகங்களில் நடிப்பார்!

ஹைதரபாத், மே 19

ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் என். ரி. ராமராவ் மீண்டும் நடிக்கப்போகிறார்.

இம்முறை சினிமாவில்அல்ல மேடைகளில் என்று அவர் அறிவித்திருக்கிறார்.

புயலினால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திர மாநில மக்களின் நிவாரணப் பணிகளுக்கு நிதி திரட்டுமுகமாக மேடை நாடகங்களில் அவர் நடிக்கப் போவதாக செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் தெரிவித்தார்.

அவரின் நாடகங்களில் கன்னட நடிகர் ராஜ்குமார். தமிழ் நடிகர் சிவாஜி கணேசன் ஆகியோரையும் நடிக்க அழைத்திருக்கின்றார்.

ராமராவ் 300 படங்களில் நடித்திருக்கிறார் அவர்கடைசியாக நடித்துக்கொண்டிருந்த படம் 'விஸ்வாமித்திரா' அது இன்னும் தயாரிக்கப்பட்டு முடியவில்லை. (எ)

## இந்தியாவின் அடக்கு முறைக்கு எதிராக பெனாஸிர் பிரசாரம்

அங்காரா, மே 19

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ இரண்டாம் கட்டமாக நேற்று துருக்கி சென்றார்.

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான்நிலைக்கு ஆதரவு தேடுவதற்காக இஸ்லாமிய நாடுகளுக்கு 9 நாள் பயணம் ஒன்றை பெனாஸிர் மேற்கொண்டிருப்பது தெரிந்ததே.

முதலில் ஈரான் தலைநகர் தெஹ்ரரன் சென்றிருந்த பெனாசிர் பூட்டோவுக்கு ஈரான் அரசு விருந்துபசாரமளித்து கௌரவித்தது.

அதில் கலந்துகொண்டு பேசுகையில், காஷ்மீரில் இந்திய அரசு இனக்கொலையில் ஈடுபட்டுள்ளது. இஸ்லாமிய உலகம் இதற்கு எதிராக ஏகோபித்த குரல் கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது'' என்று பெனாசிர் பூட்டோ சொன்னார். (எ)

## சோவியத் யூனியனில் பௌத்த ஆலயம்

டாஷ்கெண்ட், மே 19

சோவியத் யூனியனில் குவான் ஏகாதிபத்திய காலத்தில் இருந்த பலவரினின் தெர் என்ற நகரை அகழ்வாராய்ச்சிகளின் போது நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சோவியத் உஸ்பெக் குடியரசில் அமைந்துள்ள இந்த இடத்தில் ஐ.நா. உதவியுடன் அகழ்வாராய்ச்சி வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. பண்டைய காலத்தில் பிரசித்தி பெற்று திகழ்ந்த பட்டுநூல் பாதையில் இந்த நகரம் அமைந்திருந்தது

இக்கால கட்டத்தில் இங்கு அடைந்திருந்த பௌத்த ஆலயங்களுக்கு யாத்திரிகர்கள் இப்பாதையூடாகவே சென்றனர் என்று அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் கருதுகின்றனர்.

இத்துறையில் உஸ்பெக் வரலாற்று. கலை ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

குவன் காலத்து நாணயங்கள் ரோமாபுரியிலும் சீனாவிலும் கண்டெடுக்கப்பட்டதாக சரித்திர ஆசிரியர்கள்கூறுகின்றனர். இதேநேரம் தாஜிகிஸ்தானில் உள்ள விலைமதிப்புள்ள கற்கள் மேற்பட்டி இரு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வாராய்ச்சியின் போது கலாச்சாபன் பிரதேசத்தில் இந்தியக்கட்டடக் கலையுடன் சம்பந்தப்பட்ட ஒரு பௌத்த ஆலயமும் கண்டெடுக்கப்பட்டது.

இந்திய எழுத்துச் சுவடிகளுடனான நகைகள், மட்பாண்டங்கள் என்பன 1972 ஆம் ஆண்டு இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. இவை 1,800 வருடங்களுக்கு முந்தியவையாகும்.

டால்வேனின் டா இடத்தில் 5-6 மீற்றர் உயரமுடைய [illegible] பிராணின் சிலை ஒன்றும் கண்டெடுக்கப் பட்டுள்ளது.


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. வல்லிபுரம் ஜெகதீசன்**

(முன்னாள் பொறியியலாளர் உர ஆக்கக் கூட்டுத்தாபனம், லங்கா சீமெந்து லிமிட்டெட்)

ஆண்டவன் படைப்பு: 17 - 10 - 1946

அழிப்பு: 20 - 05 1987

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மை வழிநடத்தி மீளாத் துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்பு மனைவி
தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(C/4554)




குமுலுஸ் D.F. போட்டி

# BASF குமுலுஸ் D.F.

## பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |




மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. மேழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ன்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.

வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ______
முகவரி ______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

கிருமி நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா அரசுக்கு இறுதிச் சந்தர்ப்பம்
# தவறினால் யுத்தம் நடத்த நாங்கள் தயார்!

## அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

அலுவலகச் செய்தியாளர் ,— எஸ். இராஜ்குமார்

*நெல்லியடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேனிசை செல்லப்பா குழுவினரின் தமிழ் ஈழ எழுச்சிப்பாடல் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து அவர் தெரிவித்த தகவல்கள் இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளன*

இன்றைய அரசியல் சூழ்நிலை நெருக்கடியான ஒரு கட்டத்தில் உள்ளது. இலங்கை அரசின் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

தற்போதைய பேச்சுக்கள் வெற்றியளிக்குமா? எமது பிரச்சினை தீருமா? அல்லது மீண்டும் நெருக்கடிகள் மோதல்கள் ஏற்படுமா? — இப்படி மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுவது எமக்குத் தெரியும்.

சரியாக ஒரு வருடத்துக்கு முன் சென்ற ஆண்டு மே மாதத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே பேச்சுக்கள் ஆரம்பமாகின.

அந்த சூழ்நிலையில் பல களங்களில் பல முனைகளில் நாம் போராடிக் கொண்டிருந்த சமயம் பிரமாண்டமான இந்திய இராணுவம் ஒரு புறமும், இலங்கை ஆயுதப் படைகள் ஒருபுறமும், ஐந்து ஆயுதக் குழுக்கள் ஒரு புறமாக நிற்க நாம் தனித்து நின்று போராடிக் கொண்டிருந்தோம்.

'அந்த சூழ்நிலையில் தான் ஜனாதிபதி பிரேமதாஸா எம்மை பேச்சுக்கு அழைத்தார். இந்திய இராணுவம் இரண்டு வருடங்களுக்கு மேலாக போராடியும் விடுதலைப் புலிகளை அடக்கிவிட முடியவில்லை. விடுதலைப் புலிகளை அடக்குவதாக கூறிக்கொண்டு இந்திய இராணுவம் இலங்கை மண்ணில் நிரந்தரமாக நிலைகொண்டு விடும். அதற்குப் பின்னர் அவர்களை அகற்ற முடியாது' — என்று உணர்ந்த பிரேமதாஸா எப்படியாவது இந்திய இராணுவத்தை வெளியேற்றிவிட வேண்டும் என்ற முடிவில் எம்முடன் பேச முன்வந்தார்.

இந்திய இராணுவம் இங்கிருந்ததால் வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது மட்டுமல்ல, தென்னிலங்கையிலும் ஒரு புரட்சிகர சூழ்நிலை உருவாகி சிங்கள அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இதன் காரணமாகவே பிரேமதாஸா எம்மை பேச்சுக்கு அழைத்தார்.

ஆகவே இந்த பேச்சின் முக்கிய நோக்கம் எப்படியாவது இலங்கையிலிருந்து இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றிவிட வேண்டுமென்பதுதான் எமது நோக்கமும் அதுவாகத்தான் இருந்தது.

இந்திய இராணுவம் இங்கிருந்து கொண்டு எமது மக்களை பாதுகாக்கவோ, எமது மக்களின் நலனை பேணவோ முற்படவில்லை. மாறாக மக்களை கொன்று குவித்து அட்டகாசம் புரிந்து கொண்டிருந்தது.

எனவே இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டி நாமும் பேச்சில் கலந்து கொண்டோம்.

ஆகவே விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் ஒரு ஒத்திசைவான கருத்து இருந்தது. இந்த நோக்கின் அடிப்படையில் பேச்சு நடந்தது. பேச்சுகள் ஆரம்ப காலம் தொட்டு வெற்றி பெற்று வந்தன.

### யுத்த நிறுத்தம்

பேச்சுக்களின் காரணமாக முதலில் இலங்கை ஆயுதப் படையுடனும், பின்னர் இந்தியபடையுடனும் யுத்தநிறுத்தம் ஏற்பட்டது. அதனை அடுத்து குறிப்பிட்ட காலத்தில் இந்திய இராணுவம் எமது மண்ணைவிட்டு வெளியேறியது.

இந்திய இராணுவம் வெளியேறியபின் அதாவது இலங்கை அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருந்தஒத்திசைவான கருத்து நிறைவேறிய பின்னர் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைபற்றி நாம் பேச ஆரம்பித்தோம்.

தமிழீழ மக்களுக்கு ஒரு தற்காலிக தீர்வு பெறலாம் என்ற நோக்கில் இந்த பேச்சுக்களை நடத்தினோம். தமிழீழ மக்களுக்கு ஒரு நிரந்தர தீர்வுகாண்பதற்காகஇலங்கை அரசுடன் பேச்சு நடத்தவில்லை.

மாகாணசபைக்கு உருப்படியான அதிகாரம் இல்லை என்பது எமக்கு தெரியும். என்றாலும் அதை இடைக்கால தீர்வாக ஏற்று, பாதிக்கப்பட்டிருக்கும் எமது மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கவும், ஒரு சமாதான சகஜ நிலையை ஏற்படுத்தவும் ஓர் இடைக்கால தீர்வாக அதனை ஏற்றுஇந்த பேச்சுக்களை நடத்தினோம்.

இலங்கை அரசும் மாகாண சபையை கலைத்து தேர்தல் நடந்தால் அரசமைப்பின் ஆறாவது திருத்த சட்டத்தை நீக்குதல் ஆகிய உறுதிமொழிகளைத் தந்தது.

இதனால்தான் எமது அரசியல் பிரிவை ஒரு ஜனநாயக கட்சியாக மாற்றி, அரசியல் கட்சியாக பதிவு செய்து அதன் அமைப்புகளை விரிவாக்கம் செய்து, மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று, கிராமம் கிராமமாக அவைகளை ஏற்படுத்தி வெகுஜனத்தை எமது கட்சியின் பின்னால் அணிதிரட்டினோம்.

### அணுகுமுறையில் மாற்றம்

ஆனால் அண்மையில் இலங்கை அரசின் அணுகு முறையில் அதாவது விடுதலைப் புலிகளுடன் பேசி சுமுகமான முறையில், சமாதானமான முறையில் ஒரு தீர்வைகாண வேண்டும் என்ற அணுகு முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அரசு-புலிகளின் பேச்சுமூலம் வடக்கு கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வருவதை சிங்கள இனவாத கட்சிகள் விரும்பவில்லை. அதனால் நாடாளுமன்றத்தில் எந்த விவா[illegible] கொண்டாலும் விடுதலை புலிகளிற்கு எதிராக சிங்கள இனவாத கட்சிகள் குரல் எழுப்பத் தொடங்கின.

'விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்கள் களையப்பட வேண்டும், வடக்கு, கிழக்கு விடுதலைப் புலிகள் கையில் இருக்கக்கூடாதுபிரேமதாஸா



அன்ரன் பாலசிங்கம்

சிங்கள மக்களுக்கு துரோகம் செய்கிறார் 'என்றெல்லாம் அக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க தொடங்கினார்கள்.

இதனை கேட்ச, கேட்க, பிரேமதாஸா ஆட்டம்காண தொடங்கினார்.

ஒருசமயம்நான், மாத்தயா, யோகி ஆகியோருடன் அவரை சந்தித்தபோது அவர் நேரிலேயே சொன்னார்:- எதிர்க்கட்சிகள் உங்களுக்கு எதிராக விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள், சிங்கள மக்கள் அஞ்சுகிறார்கள், நீங்கள் தமிழீழக் கோரிக்கையை கைவிடவில்லை, ஆயுதங்களை கைவிடவில்லை; வடக்கு கிழக்கு உங்கள் கைகளில் உள்ளது; உங்களுக்கு மாகாண ஆட்சி அதிகாரமும் வந்து விட்டால் அடுத்தபடியாக தமிழீழத்தை உருவாக்கி விடுவீர்கள் என்று சிங்களவர்கள் பயப்படுகிறார்கள் என்று எமக்குச் சொன்னார் பிரேமதாஸா.

ஆகவேநாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் எழுப்பிவரும் குரல் அவருக்கு அச்சுறுத்தலை ஊட்டியிருக்க வேண்டும்.

அடுத்து சிங்கள பௌத்த பீடம் பிரேமதாஸாவுக்கு எச்சரிக்கைவிட தொடங்கியது.

விடுதலைப் புலிகளை நம்ப வேண்டாம். அவர்கள் தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட மாட்டார்கள் அவர்கள் மாகாண நிர்வாகத்தை புறக்கணித்து அடுத்தபடியாக தமிழீழத்தை உருவாக்கி விடுவார்கள் என்று எச்சரித்தார்கள்.

சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் கூட விடுதலைப்புலிகளுக்கு எதிராக விஷமப் பிரச்சாரத்தில் இறங்கியது.

அரசமைப்பின் ஆறாவது திருத்தம் காரணமாக கடந்த ஏழு ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை.

என்றாலும் சமீபத்தில் இந்தியாவின் அழுத்தம் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல இயக்கங்களையும் — விடுதலைப் புலிகளை தவிர, சகல அரசியல் மற்றும் ஆயுதக்குழுக்களைச் சேர்தவர்களும்— இந்த சட்டதிருத்தத்தை ஏற்று. ஒற்றையாட்சியின் கீழ் சத்திய பிரமாணம் செய்து, தமிழீழப் போராட்டத்தை கைவிட்டு மாகாணசபையிலும், நடாளுமன்றத்திலும் அமர்ந்திருக்கிறார்கள்.

ஆனால் எமது இயக்கம் மட்டும் அன்றுமுதல் இன்று வரை இந்த சட்ட திருத்தத்தை ஏற்க முடியாது; இது மிகஅநீதியானது: எமது சுதந்திர போராட்டத்திற்கு ஆப்பு வைப்பதாக இது அமைவதால் இது கட்டாயம் நீக்கப்பட வேண்டும். இது நீக்கப்படாவிட்டால் நாம் தேர்தலில் இறங்கப் போவதில்லை அரசியல் நீரோட்டத்தில் இறங்கப்போவதில்லை' என்று அடித்துக்கூறி ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுக்களின் போதும் அதனைத் திட்டவட்டமாக வலியுறுத்தி வந்தது.

### இரு விஷயங்கள்

சென்றதடவை ஜனாதிபதி பிரேமதாஸாவை சந்தித்த போதும் இரு விஷயங்களை நாம் சொன்னோம்.

''மாகாணசபையை கலைத்துவிடுங்கள்; மாகாணசபை தேர்தலுக்கு நாள் குறித்து விடுங்கள். அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுங்கள்'' என்று நாம் அவரை கேட்டோம். அவரும் அதற்கு இணங்கினார்.

அதாவது திருத்தத்தை ஐ.தே.க அரசு விரும்பினால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைகளுடன் நிறைவேற்ற முடியும். ஐ.தே.க, மற்றும் தமிழ்-முஸ்லீம் கட்சிகளும் சில இடது சாரிக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இந்த சட்டத்தை நீக்க முடியும்.

ஆனாலும் அதாவது திருத்தம் நீக்கப்பட்டால்'' தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை போராட்டத்திற்கு அது உத்வேகம் அளிக்கலாம்; விடுதலைப் புலிகள் தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுக்கலாம்'' என்று எதிக்கட்சிகள் குரல் கொடுத்ததால், பிரேமதாஸா தனது நிலைப்பாட்டிலிருந்து மெல்ல மெல்ல வழுகத் தொடங்கினார்.

### புதிய அணுகுமுறை

இப்பொழுது புதிய அணுகு முறையை கடைப்பிடிக்கிறார்கள். மாகாணசபையைகலைக்காமல் தேர்தலை நடத்தாமல் தமிழீழத்தில் தொடர்ந்து ஒரு அரசியல் சூன்யநிலையை நீடிப்பது; மற்றைய தமிழ் துரோக கும்பல்களை அழைத்துப் பேசுவது; விடுதலைப்புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்ப்பது இப்படியாக இந்த புதிய அணுகுமுறை அமைந்திருக்கிறது.

தேர்தலை நடத்தாமல் விடுவதன் மூலம் விடுதலைப் புலிகள் மாகாண நிர்வாகத்தை கைப்பற்றுவதை தடுத்து நீண்டகாலமாக ஓர் அரசியல் வெறுமை நிலையை நீடித்தால், போராட்ட சக்தியாக இருக்கும் விடுதலைப் புலிகளின்இராணுவ அமைப்பு ஆட்டம் காணும்; போராளிகள் மத்தியில் போர் குணம் மழுங்கடிக்கப்படும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

எனவே நீண்ட காலத்திற்கு ஓர் அரசியல் சூன்ய நிலைய உருவாக்கி எந்த உருப்படியான முயற்சிகளையும் செய்யாமல் தட்டிக் களித்து வந்தால், விடுதலைப் புலிகளின் இராணுவபலத்தை குறைத்துவிடலம் என்ற அந்தரங்க நோக்கில் இப்படியான காரியங்கள் செய்யப்படுகின்றன.

ஈ.பி. ஆர் எல். எவ் போன்ற இயக்கங்கள் இங்கு இந்திய இராணுவத்திற்கு பக்க பலமாக இருந்து நடத்திய அட்டுழியங்கள் மக்கள் அறிந்தவை.

இந்த கும்பலின் தலைமை பீடம் ஒரிஸாவிலும், வேறு தலைநகரத்திலும் ஒழிந்திருக்கிறது இந்தியத்தரப்பினால் நாடாளுமன்ற ஆசனத்தில் அமர்த்தப்பட்ட ஒருசில எம்.பிக்கள் மட்டும் கொழும்பில் இருக்கிறார்கள்.

இவர்களைக் கூப்பிட்டு இவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கௌரவித்தவர்களுடன் பேச்சு நடத்தினால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்து விடும் என்ற தோரணையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இந்த புதிய அணுகுமுறையை நாடுகிறது.

சர்வகட்சி மாநாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து. அந்த சர்வகட்சி மாநாட்டில் விடுதலைப்புலிகளும், ஈ.பி. ஆர். எல். எவ்வும் மற்றும் சகல அரசியல் குழுக்களும் ஒன்றாகச் சேர்ந்து தமிழர் பிரச்சனை பற்றி பேசலாம் என்று தெரிவித்து நேரடியாக விடுதலைப் புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்க்க இந்த அணுகுமுறை வழி செய்கிறது.

### இறுதிச் சந்தர்ப்பம்

ஆகவேதான் நாம் ஸ்ரீலங்கா அரசுக்கு தெட்டதெளிவாக சொல்ல இருக்கின்றோம்.

''இதுதான் இறுதியாக நாம் உங்களுக்குத் தரும் சந்தர்ப்பம் நாங்கள் பொறுமையாக இருப்போம். மீண்டும் மீண்டும் அவர்களுக்குச் சொல்லுவோம். மாகாண சபையைக்கலைத்துதேர்தலை நடத்துங்கள். தேர்தலில் எமதுமக்களை சந்திக்க நாம் தயராகயிருக்கிறோம். வடக்கு கிழக்கு மாகாணத்தில் எமது மக்கள் ஒரு நிர்வாக ஆட்சியை ஏற்படுத்த வாய்ப்பு அளித்துக் கொடுங்கள் உலக நாடுகள் எமது மக்களுக்கு என ஒதுக்கியிருக்கும் 2ஆயிரம் கோடி ரூபாவை எமது மக்களுக்கு நிவாரணமாக கொடுங்கள் என்ற ரீதியில் நாம் தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்துவோம். அமைச்சர் ஹமீத் அடுத்த திங்கள் அல்லது செவ்வாய் இங்கு வருகிறார். அவரிடம் திட்ட வட்டமாக சில விடயங்களை நாம் சொல்ல இருக்கிறோம்.

நீங்கள் விடுதலை புலிகளை அன்னியப்படுத்தி, மற்றத் துரோகக் கும்பல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், எம் மீது இராணுவ நடவடிக்கைக்கு ஆயத்தம் செய்தால், எமது மக்களை காக்க நாங்களும் ஆயுதம் ஏந்த தயராகவுள்ளோம்.

ஆனால் இதுவே உங்களுக்கு கடைசி சந்தர்ப்பமாக நாம் தருகிறோம். இன்னும் காலமிருக்கிறது.

இறுதியாக நீங்கள் எமது மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமானால் நேர்மையான, உண்மையான முறையில் சில காரியங்களை செய்து எமது நேர்மையான, நியாய பூர்வமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

### இராணுவ முகாமில் ஈ. பி. ஆர். எல். எவ்

ஈ. பி. ஆர். எல் எவ் இயக்கத்துடன் முதல் முதலில் பேச்சுக்கள் மட்டும் நடைபெறவில்லை. இந்த இயக்கத்தவர்கள் நூற்றுக் சணக்கில் கொழும்பு, சிங்கள இராணுவ முகாம் ஒன்றில் தங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கு சிங்கள இராணுவம் மூலம் பயிற்சி அளிக்கப்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

அப்படியாக இருந்தால் எட்டப்பர் கோஷ்டியை கொண்டு, துரோக கும்பலை கொண்டு, மீண்டும் ஒரு கூலிப்பட்டாளத்தை உருவாக்கி, விடுதலைப் புலிகளுக்கு எதிராக மீண்டும் ஒரு இராணுவ யுத்தத்தை ஆரம்பிக்க சிங்கள அரசு திட்டமிடுகிறதா?

கலைஞர் கருணாநிதியே தமிழ் நாட்டிற்கு வரவேண்டாம் என ஒரிஸாவுக்கு விரட்டியகுழுவுக்கு முக்கியத்துவம் அளித்து, பாதுகாப்புக் கொடுத்து, தங்க இடவசதி செய்து, பணஉதவி தந்து, இப்போது பயிற்சியும் அளிக்க திட்டமிட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது.

இது ஓர் ஆபத்தான அணுகு முறையாகும்.

தலைவர் பிரபாகரன் ''இந்தியா விட்ட இமாலயத் தவறை இலங்கை விடக்கூடாது'' என சமீபத்தில் சொல்லியிருந்தார். ஆனால் இதே தவறை தான் தற்பொழுது இலங்கை அரசு செய்வது போல் எமக்குத் தென்படுகிறது. எனவே நாம் விழிப்பாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டும்.

இந்த கூட்டத்திற்கு வரும் போது நான் தலைவர் பிரபாகரனை சந்தித்து விட்டுத் தான் வந்தேன். அவர் எனக்குச் சொன்னார். ''மக்களிடம் உண்மை நிலையை சொல்லுங்கள்; ஸ்ரீலங்கா அரசின் அணுகு முறையில் மாற்றம் இருக்கிறது; அவர்கள் இராணுவத்தை பலப்படுத்தி வருகிறார்கள்; கிழக்கில் திருகோணமலையில் ஏராளமான இராணுவ முகாம்கள் இருக்கின்றன; அவை பலப்படுத்தப்படுகின்றன; பலாலியிலும், கோட்டையிலும் மற்றும் இடங்களிலும் படிப்படியாக இராணுவ பலத்தைக் காட்டி வருகிறார்கள்; ஆகாய விமானங்களில் வேவு பார்க்கின்றார்கள்; எமது துரோக கும்பல்களை அழைத்து பேசுகிறார்கள்; இவற்றின் நோக்கம் என்ன? இவை எந்தளவு ஆபத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பன பற்றி விளக்குங்கள்'' என்றார்.

அத்துடன் ஒரு பத்திரிகையில் குறிப்பிட்டதை நினைவுபடுத்தி ''நான் ஒருவரையும் ஏமாற்றமாட்டேன்; ஆனால் என்னை எவராவதுஏமாற்ற முயன்றால் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவேன்'' என்பதை சொல்லி, ''நாம் நேர்மையாக உண்மை, தர்மம் என்ற போக்கில் எமது மக்களின் நலன்களுக்காக போராடுவோம். சிங்கள அரசிடம் நீதி கேட்போம். ஆனால் எமக்கு நீதி வழங்க சிங்கள அரசு மறுத்து மீண்டும் ஆயுத போராட்டத்துக்கு, இராணுவ அடக்குமுறைக்கு திட்டமிட்டால், எமது மக்கள் மீது மீண்டும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டால் நாம் எமது மக்களை பாதுகாக்கவும், இலட்சியத்தை முன்னெடுக்கவும் ''மீண்டும் ஆயுத போராட்டத்திற்கு தயாராக இருப்போம்'' என வலியுறுத்திச் சொன்னார்.

இதுவே இன்றைய சூழ்நிலை இதில் நாம் விழிப்பாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும்.

நாம் யுத்தத்தில் அக்கறையானவர்களல்ல; ஆயுதத்தை நேசிப்பவர்களுமல்ல; எம்மக்களின் விடிவுக்காக அளப்பரிய தியாகங்களை செய்து உண்மையுடனும், தூய்மையுடனும் செயலாற்றுகிறோம் -

இப்படி திரு. அன்ரன் பாலசிங்கம் கூறினார். ★


## பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வி பேபிசாளினி ★

மாதகலைச் சேர்ந்த சாள்ஸ் மல்லிகா தம்பதியினரின் செல்வப் புதல்வி பேபிசாளினி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, பருத்தித்துறையைச் சேர்ந்த தாசன் மாமா, பெரியப்பா, சித்தப்பா, குட்டிச் சித்தப்பா, கனடாவில் உள்ள தொட்டா, தொட்டப்பா, அத்தை, தொட்டிலடி அம்மம்மா அன்ரி, அங்கிள், ஜேர்மனியில் உள்ள பெரியப்பா, பெரியன்ரி, அண்ணா, அக்கா, தங்கச்சி, (சுவிஸ் யோகன் மாமா) சியாம் சித்தி, ருசி, விஜி. மற்றும் உற்றார், உறவினர், பல்கலையும் கற்று கண்ணகை அம்பாள். மாதா அருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

சாள்ஸ் மல்லிகா,
கனால் வீதி,
மாதகல். [13149]

## திருமண அழைப்பிதழ்

| | |
|---|---|
| திரு. திருமதி இரத்தினம், 7, வேலப்பர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | திரு. திருமதி நாகலிங்கம், 6, அருளம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| மணமகன் ரவி ஸ்ரீரங்கதாஸ் | மணமகள் மீரா பேபிரஞ்சனி |

நாள்: 20 - 05 - 1990 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 6.30 — 7.30 மணி வரை (கனடா நேரப்படி)
இடம்: ரிச்மென்ட் ஹில் பிள்ளையார் கோவில் Toronto.

402, Lands Downe-Ave, Toronto, Ontario, Canada.

531, Cale Donia Rd, Toronto, Ontario, Canada.

[3607]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 08 — 1909

மறைவு: 23 — 05 — 1987

ஆண்டுத்திதி: 20 — 05 — 1990

திரு. சி. சிவசம்பு
(இளைப்பாறிய தபால் அதிபர்)

தந்தையாய் குருவாய் தலைவனாய் எம்மை வழி நடாத்தி இன்று சிவத்தோடு கலந்துவிட்ட உங்கள் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலா.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்குவேலி,
மானிப்பாய். (13218)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 160க்கும் மேற்பட்ட நாடுகளில் விசா கார்ட் திட்டம் அமுலில்

## வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் வின்சன்ட் தகவல்

வவுனியா மே 20

160 க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் விசா கார்ட் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இலங்கை மக்களும் இதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டத்தை இங்கும் நடைமுறைப்படுத்தி வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகிறோம். இந்த வரிசையில் வவுனியா மாவட்டத்தில் இது அறிமுகப்படுத்தப்படுகிறது.

இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு. வி. ஜே. வின்சன்ட் வவுனியாவில் நடைபெற்ற இலங்கை வங்கியின் விசா கார்ட் அறிமுக கருத்தரங்கு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வங்கியின் வன்னிப்பிராந்திய முகாமையாளர் திரு. என். சிவன் தலைமையில் பிராந்திய அலுவலகத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. வின்சன்ட் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

''காசு புழக்கமற்ற ஒரு சமுதாயத்தை நோக்கி உலக நாடுகள் நடைபோடுகின்றன. அவற்றோடு நமது நாடு இணைந்து கொள்வதற்காகவே விசா கார்ட் திட்டத்தை இலங்கை வங்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

பணத்தை கையில் எடுத்துச் செல்வது, வியாபாரிகள் அதனால் பெற்று எண்ணிப் பாதுகாத்து பின்னர் வங்கியில் இடுவது, மற்றும் திருடர் தொல்லை, கள்ள நோட்டுத் தொல்லைகள், என்பவற்றிலிருந்து இந்தப் புதிய முறை நிவாரணம் அளிக்கிறது. கொடுக்கல் வாங்கல் கொள்வனவுகளையும் இலகுபடுத்துகின்றது.

அது மட்டுமல்லாமல் வேறு பல நன்மைகளையும் கொண்டுள்ள விசா கார்ட் முறையைப் பயன்படுத்தி அனைவரும் நன்மை அடைய வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

வங்கி அபிவிருத்திப் பகுதியின் உதவிப் பொது முகாமையாளர் திரு. என். விஜேநாதன் வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் ரங்கராஜன் மற்றும் இலங்கை வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் திரு. வி. ஜெகதீசன் திரு. ரட்ண கோபால் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

வைபவ ரீதியாக விசா கார்ட்டை அரசாங்க அதிபர் வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்கினார்.

சுய தொழில் முயற்சித் திட்டங்களான மீன் பிடித்தல் மீன் வியாபாரம் போன்றவைக்கு பணமும் மற்றும் விவசாயத்திற்குரிய நீர் இறைக்கும் இயந்திரமும் கடனுதவித் திட்டத்தின் கீழ் வங்கி அதிகாரிகளால் வழங்கப்பட்டன. (இ164)

### சிங்கப்பூர் செல்லும் யாழ். சாரணர்

யாழ்ப்பணம் மே 20

இவ்வாண்டு இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு விருந்தினராசச் செல்லும் 9 சிறந்த சாரணர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 2 சாரணர்களும் அடங்குவர்.

யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் செல்வரெத்தினம் கந்தன், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ரதீசன் ஆகியோரே யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவாகிய சாரணர்கள் ஆவர்.

இவர்கள் 26ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டு 5 நாட்கள் சிங்கப்பூர் சாரணர் முகாமில் தங்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்புவார்கள். (க-18)

### ஒலிப்பதிவு நாடா

மானிப்பாய் மே 20

பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் பதினொராம் ஆண்டுக்கான சங்கீத செயல்முறைப்பாடல்களை சங்கீதபாட கல்வி அதிகாரி திரு. எஸ். சணபதிப்பிள்ளையும் ஆசிரியர் திரு. வி. செல்லத்துரையும் ஒலிப்பதிவு செய்து ஒலிப்பதிவு நாடாக்களை மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலக ஆண்டுவிழா அன்று வெளியிட்டுள்ளனர். (இ-90)


### வெங்காய விலை

மயிலணி மே 20

சுன்னாகம் சந்தையில் சின்ன வெங்காயம் நேற்று கிலோ 35 ரூபா முதல் 40ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. (இ-89)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### திரு. வேலுப்பிள்ளை முருகேசு

தோற்றம்: 15 - 02 - 1914 மறைவு: 20 - 04 - 1990

எங்கள் குலவிளக்காய், ஒளிச்சுடராய், அறிவாய், பண்பாய், அன்பின் திருவுருவாய், வாழ்க்கையின் வழிகாட்டியாய் வாழ்ந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே, எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொள்ளச்சென்றீரே? என்றும் உங்களை மறவோம். உங்கள் ஆத்மா சாந்தியடையஇறைவனை வேண்டுகின்றோம்.

20 - 05 - 1990 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல: 111/13 இராஜசிங்கம் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (3593)

---

## 1 ஆம் வருட நினைவஞ்சலி



திருமதி

### சாந்தகுணநாயகி பஞ்சலிங்கம்

(வல்வெட்டித்துறை)

பூமியில் மலர்வு: 14 - 03 - 1923 சுவர்க்கம் புகுர்வு: 31 - 05 - 1989

திதி: 20 - 05 - 1990

எங்கள் நெஞ்சத்தில் என்றென்றும் அணையாத சுடராக ஒளிவீசும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

கணவர், மகன்மார்,
மருமகள்மார், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

க. பஞ்சலிங்கம்,
''சாந்த வாசா''
வேம்படி, வல்வெட்டித்துறை, (3597)

---

## தெய்வீக திருக்குறள் தமிழர் பண்பாட்டின் உயிர்

— மறைந்த மாமேதை - கவி யோகி

### திரு. நடராசா யோகநாதன்

தெய்வீக திருக்குறள் மன்றம், Young Men's Divinekural Association YMDA முதலியனவற்றின் நிறுவனரின் 63ஆவதுபிறந்த நாளில் அவருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களை அவரின் நற்பணிகள் தொடர ஆண்டவன் அருள் பாலிப்பாராக.

திருக்குறள் விசுவாசிகள்

திருக்குறளை மக்களிடையே பரப்பி, ஒற்றுமையையும், சமாதானத்தையும் ஏற்படுத்த விரும்புவோர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
வை. எம். டி. ஏ

10, திருவள்ளுவர் சாலை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [13212]

---

## COMPUTER அறிவைப் பெற்று

Computer யுகத்தில்
நீங்களும் ஒரு அங்கத்தவராகுங்கள்!

### COMPUTER STUDIES

Reg. No. 16063

★ BASIC ★ D BASE III PLUS
★ LOTUS 1-2-3 ★ PASCAL
★ WORD STAR

குறிப்பு:

- 60 மணித்தியால செய்முறைப் பயிற்சி
- ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவ, மாணவிகள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
- ஒவ்வொருவர் மேலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

### ★ INSTITUTE OF COMPUTER STUDIES

No. 60, Vidanes Road,
Chundikuli, Jaffna.
Sri Lanka. [3596]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

''ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு''



### S. S. மரியான் தியாகராஜா

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

பிறப்பு: 27 - 03 - 1923 இறப்பு: 20 - 04 - 1990

''அன்பின் கடலே அணையாச் சுடரே
துன்பம் துடைக்கும் அன்பர் உம்மைப் போல்
துணை வேறுலகில் இல்லையே
தண்ணீர் கிடையாதலைந்தே
கானில் தவிக்கும் கலைமான் எனவே
கண்ணீர் உகுத்தோம், களைத்தோம்
உம்மைத் தேடி.

அன்னாரின் மறைவுத் துயரில் கலந்து கொண்டோர், மலர் வளையம் சாத்தியோர், அனுதாபச் செய்தி அனுப்பியோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிளைகள்,
சகோதரன், உற்றார், உறவினர்.

இல, 36/1, [illegible] வீதி,
ஊர்காவற்றுறை. [13217]

---

## வெற்றிடங்கள்

### மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்

ஆங்கிலத்தில் உள்ள அரியநூல்களைத் தமிழாக்கம் செய்ய மேலும் சில மொழி பெயர்ப்பாளரும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் தேவை. வயதெல்லை இல்லை. 27 - 05 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், 1 மணிக்கும் இடையில் தகுதிச் சான்றுகளுடன் நேரில் சமுகந் தரவும் திறமை, அனுபவத்துக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

தொடர்பு:

இல. 6, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(மணிக்கூட்டுக் கோபுரத்துக்கண்மையில்) [3599]

---

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேர்ணல் ராதா

[க. ஹரிச்சந்திரா]

தாயின் மடியில்: 22 - 12 - 1956 தாயக விடிவில் 20 - 05 - 1987

**வீரம் என்ற விளை நிலத்து உதித்தோன்**

வீரம் என்ற விளை நிலத்துதித்தோன்!
தீரன் ராதா சிறந்த பண்பாளன்!
செந்தமிழ்ப் பற்றால் தமிழ் மண் காக்கத்
தன்னுயிர் நீத்த தமிழ் மகன் ஆவான்!
தியாகம் என்பதும் வீரம் என்பதும்
என்றும் பிரியா என்பதை நமக்குச்
செய்கையாற் காட்டிய பெருமகன் ஆவான்!
மண்ணகம் காத்து விண்ணகம் சென்ற ராதா
எங்கள் நெஞ்சகத்துள்ளான்

உறவினர், நண்பர்கள்.

ஓடைலேன்,
வண்ணார்பண்ணை. [13228]

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### ஆறுமுகம் குணநாயகம்

B. A(S . L . A . S)

(உதவி அரசாங்க அதிபர், வவுனியா)

ஆண்டவன் படைப்பு: 24 - 04 - 1944 ஆண்டவன்அடியில்: 15 - 05 - 1985

திதி:-20 - 05 - 1990

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் திருவுருவாய் சேவையின் சிகரகாய், பழகியோர் இதயங்களில் பாசமலராக வீற்றிருக்கும் எங்கள் அன்புக் குணமே! உமது இன் சொல்லும் ஈகை உணர்வும் ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள் இதயத்தைவிட்டு அகலாதையா! உங்கள்ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்.

அன்புமனைவி, மக்கள், தகப்பன்
தாய், சகோதரங்கள், மாமன்மாமி,
மருமக்கள், பெறாமக்கள்.

சரவணை,
வேலணை. (3594)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலைத் தடுத்து வைக்க மேல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மே 19

கொழும்புத்துறை முகத்தில் நங்கூரமிட்டுள்ள 'எம்பி நோவா' என்ற கப்பலை தடுத்து வைக்கும் ஆணையை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமீர் இஸ்மாயில் கடந்த புதன்கிழமை பிறப்பித்தார்.

இக்கப்பலில் பணிபுரிந்த இரண்டாவது அதிகாரியும் ஏனைய மாலுமிகளும் தாக்கல் செய்த விண்ணப்பத்தைத் தொடர்ந்தே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அலவன்ஸ்களை கப்பல் நிர்வாகம் தரவில்லை என்று இந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டிருக்கிறது. (உ-எ)

## 29 வது ஆண்டு பொதுக்கூட்டம்

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

21 - 05 - 1990 ஆம் திகதி நடைபெறவிருந்த மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத சூழ்நிலை காரணமாக 22 - 05 1990 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

செ. பரராஜசிங்கம்,
பொதுச் செயலாளர்.

104, ஜும்மா மொஸ்க் லேன்,
யாழ்ப்பாணம்

(13234)

உ
சிவமயம்

## மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை

ஷ்டி குருபூசை 24 - 05 - 1990 வியாழக்கிழமை 9 மணியளவில் கைதடி ஆச்சிரமத்தில் ஆரம்பமாகும். அபிஷேகம், பூசை முதலியன நடைபெறும்.

அடியார்கள்.

கைதடி. [3595]


## புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 90 Day Classes

வினா - விடை

அளவையியல் - கேசவன்
(குறியீடு)

ஆரம்பம்: 23 - 04 - 1990

[சி-5047]

## சிங்கப்பூரில்

பணிப்பெண்களுக்கு வேலைவாய்ப்பு

பயணச் சீட்டுக்குரிய பணம் தவணை முறையில் சிங்கப்பூரிலேயே கட்டலாம்.

BAHRAIN:-

ஸ்பிறே பெயிண்டர்ஸ் தேவை

தொடர்பு:-

A.K. சிவஞானம்
171 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
Labour Licence - 585
(13235)

Neems Agencies
265/15, Galle Road,
Colombo - 3
(Behind Chinese Lotus Hotel)

## COMPUTER கல்வி

கொழும்பு ICC இன் யாழ் கிளையில்

- ★ சிறந்த தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள்
- ★ தாராளமான பயிற்சி நேரம்
- ★ IBM Compatible Computer கள்
- ★ எவரும் இலகுவாக எந்தவித Computer ஐயும் கையாளத்தக்கதாக DOS (Disk Operating System), Hardware, Software கற்பிக்கப்படும்.

NEXT BATCH: ஆரம்பம்

வார இறுதி வகுப்புக்கள் 26 - 05 - 1990
வார நாட்கள் வகுப்புகள் 28 - 05 - 1990
காலை 9.00 மணி

பாடநெறிகள்:
BASIC, d BASE III +, LOTUS 1-2-3
WORDSTAR, AUTOCAD
DIPLOMA I, DIPLOMA II

தேவை INSTRUCTOR [Trainee]

தகுதிவாய்ந்த, COMPUTER இல் ஒரு வருட அனுபவம் உள்ளவர்கள் தேவை.
22-05-1990 காலை 9.00 மணிக்கு சமுகமளிக்கவும்

மேலதிக விபரங்களுக்கு:

ICC　102, 3ம் குறுக்குத் தெரு,
(Safety அருகாமை)
யாழ்ப்பாணம்.

[சி-4557]


# படையினரால் கொலையுண்ட மீனவருக்கு நிவாரணம் வேண்டும்

## நாடாளுமன்றத்தில் ஈரோஸ் எம். பி

கொழும்பு, மே 20

மண்டைதீவில் பலமீனவர்கள் ஸ்ரீலங்கா படையால் கொலை செய்யப்பட்டனர். பின்பு இன்னும் பலர் இந்தியப் படையால் கொலை செய்யப்பட்டனர். இந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு இந்த சட்டமூலம் உதவ வேண்டும் -இப்படிக்கூறினார்ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ் எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை.

கடற்றொழிலாளர்கள் ஓய் ஊதிய, சமூக நலன் பாதுகாப்பு நலன்புரித்திட்ட சட்டமூலத்தின் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போதே இப்படிஅவர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

மீன்பிடி சமுதாயத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. சகல பகுதியினரும் இந்தச்சட்டத்தில் இடம் பெறவேண்டும்.

காப்புறுதி பற்றிய தொகைகள் இந்தச் சட்டமூலத்தில் குறிப்பிடாதது பெரும்குறை ஆகும்.

மீன்பிடிக்கப் போவோர் மிகவும் சிறிய வயதிலேயே மீன் பிடிப்பதால் 18 வயது எல்லையை இன்னும் குறைக்க வேண்டும். அத்துடன் 59 வயது என்பதையும் குறைக்க வேண்டும். ஏனெனில் மீனவர்கள் இளம் வயதிலேயே தளர்ந்து விடுகிறார்கள்.

வடக்கு- கிழக்கு பகுதிகளில் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றன.

பருத்தித்துறைப்பகுதியில் ஐஸ் தொழிற்சாலை ஏற்படுத்தப்படவேண்டும். இப்பகுதி மீனவர்களின் கடன் வசதி, ஐஸ் தொழிற்சாலை வசதி என்பன அதிகரிக்கப்படவேண்டும். தாளையடி, பேசாலை, முல்லைத்தீவு கிழக்குமாகாணம் ஆகிய பிரதேசங்களில் ஐஸ் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும்

அக்சரைப்பற்றுப் பகுதியில் நோயினால் மீன் இனங்கள் இறக்கின்றன. இதனை உண்ணும் மக்கள் அச்சம் காரணமாக மீனை வெறுக்கிறார்கள். இந்நிலை தொடர்ந்தால் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள். இதனால் மக்களிடையே போசாக்குக் குறையும். அரசு இவ்விடயத்தில் இன்னும் மௌனம் சாதித்து வருவது ஏன்?

ஏற்றுமதி செய்யப்படும் இறால், கணவாய் உற்பத்தி தடைபடக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. நோய் தான் இதற்குக் காரணம் என தெரிகிறது.

கடற்றொழிலாலர்களைப் பற்றிகுழு நிலையில் விரிவாக ஆராயப்படவேண்டும்; இதற்கு மாகாண சபைக்கு இடமளிக்க வேண்டும். சகலரும் இதன் மூலம் மீன் பிடிக்க ஏற்பாடு செய்ய முடியும்.

மீன்பிடித்தொழில்தொடர்பாக வடக்கு- கிழக்கு பகுதிகளில் பல வருடங்களாக எதுவித அபிவிருத்தியுமேற் கொள்ளப்படவில்லை. இந்த விடயத்தில் அரசு கூடிய கவனம் செலுத்தி வேண்டியநடவடிக்கை எடுப்பது அவசியம்.

இப்படி அவர் கூறினார். (இ-3-2)

# மக்கள்வங்கிபிரதான வீதிகிளை: 22ஆம் திகதி கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 20

மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளையில் தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணமும், வீடு திருத்துவதற்கான நன்கொடைப்பணமும் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப் படவிருக்கின்றன.

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், ஊர்காவற்றுறை' யாழ் - பெரிய கடை, சுண்டுக்குழி, நாவாந்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வீடு திருத்தும் நன்கொடைகளும். —

சங்கானை, நெடுந்திவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தொழில் முயற்சி நன்கொடைகளும் —

வழங்கப்பட விருக்கின்றன. (இ-3)

## ராமகிருஷ்ண மிஷன் தலைவர் காலமானார்

கொழும்பு, மே 20

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சம்பிரக்ஞானந்தா மகராஜ் நேற்று சனிக்கிழமை பிற்பகல் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 74.

பூதவுடல் இறுதிச் சடங்குகளுக்காக மிஷன் தலைமையகத்திலிருந்து இன்று காலை 10 மணிக்கு கதைத்தை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப் படும். [உ-ப]

## மாறிவரும்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று அவர் வடமராட்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்தார்.

இருவரும் உதவியாளர்கள் இன்றி அந்தரங்கமாகச் சந்தித்து உரையாடியதாகத்தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் குறித்து உத்தியோகபூர்வமான தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

ஆனால் —

தற்போது மாறிவரும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப, எதிர்கால நடவடிக்கைகளில் உடன்பாட்டுடன் செயற்படுவது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

தற்போதைய அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, விடுதலைப் புலிகளினால் உறுதியாக எடுக்கப்படும் சிலநடவடிக்கைகளுக்கு, இயைபாகச் செயற்படும்படி ஈரோஸ் இயக்கம் கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மலையக மக்கள்-

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அழைப்பு விடுத்துள்ளோம். எனவே இந்த ஹர்த்தாலிற்கு சகலரும்பூரண ஆதரவுவழங்க வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று யாழ். பிரதேச காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே டொமினிக் பிரஸ்தாப வேண்டுகோளை விடுத்தார். (உ-9)

## மலையகத்தில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுவிக்கப்படவில்லை. இதனால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளர் திரு. செல்லையா, உபதலைவர்கள் திரு. வி. ரி. தர்மலிங்கம், திரு. சரத் அத்துக்கோறல ஆகியோர் நேற்று நுவரெலியா பொலீஸ் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதற்கிடையில் உண்ணாவிரதப்போராட்டம் நேற்று மற்றும் பல இடங்களில் பரவி இருந்தது. வட்டவளை, மவுண்ட்ஜீன் தோட்டத்தில் 500 பேர்வரை உண்ணாவிரதம் இருந்தனர்.

வெலிஓயாத் தோட்டத்தில் சுமார் ஆயிரம் பேர்வரை உண்ணாவிரதம் இருந்தனர். [இ-10]

## நாளைய---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் செய்துகொண்ட உடன்பாடுகள் எதுவும் இந்த மக்களின் சம்மதத்தைப் பெற்றவையல்ல. அவற்றை அமுலாக்கும் காலவரையறையும் கடந்துவிட்டது

1964இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் 1974 இல் சிறிமா - இந்திரா ஒப்பந்தமும் காலாவதியாகிவிட்டன. 1987ஆம் இலங்கை - இந்திய உடன்பாடு கூட செல்லுபடியற்றதாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சி எந்தச் சட்டவரையறைக்கும் உட்பட்டதாகக் கருதமுடியாது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இன்றைய நிகழ்ச்சிகள்

மட்டக்களப்பு மே 20

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம் நடத்தும் புலவர்மணி அவர்களின் விபுலானந்தர் மீட்சிப்பத்து என்னும் நூல் வெளியீட்டு விழாவும் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளையின்'' பண்டிதமணி நினைவு மலர் '' செந்தமிழ்க் களஞ்சியம் ஆகிய நூல்கள் அறிமுக விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் மகா வித்துவான் எவ். எச்ஸ். சி நடேசா தலைமையில் நடைபெறும். விழாவில் பல பகுதிகளையும் சேர்ந்த அறிஞர்கள் கலந்து கொள்வார்கள்.

★மொறிசியஸ் தமிழர் தினத்தை யொட்டி உலகத் தமிழர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

வீடியோக் காட்சி, கண்காட்சி ஆகியன இடம் பெறும்.

## விவசாய.--

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர்களும், மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களும், மூன்று தொழில்நுட்பவியலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 26 மாணவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பீடத்துக்கான சட்டடங்களும் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் திங்கட்கிழமை நடைபெறும் கூட்டத்தில் பாடத்திட்டம், மாணவர், விரிவுரையாளர் தங்குமிட வசதிகள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட இருக்கின்றன.

இந்தக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, வடக்கு - கிழக்கு மாகாணசபை விவசாயப் பணிப்பாளர் டாக்டர் எஸ். விக்கினராசா, கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் உட்பட பலர் கலந்துகொள்வார்கள். (3)


## சுப்பஸோவின் இன்றைய வெளியீடு

ராஜசேகர் — ஜீவிதா

★ இதுதாண்டா பொலீஸ் ★
(ஒறிஜினல்)

நாகார்ச்சுனா — அமலா

★ உதயம் ★ (ஒறிஜினல்)

எமது அடுத்த வெளியீடு

கார்த்திக் — பல்லவியின்

★ கல்யாணராசி ★

சுப்பஸோ வீடியோ சென்ரர்

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (13150)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
பா. விமலகுமாரன் [சித்திரா]

மலர்வு: 13 - 06 - 1962　　உதிர்வு: 20 - 05 - 1989

திதி:-08 - 06 - 1990

சீரிய நெற்றி எங்கே சிவந்தநல் இதழ்கள் எங்கே
கூரிய விழிகள் எங்கே குறுநகை போனதெங்கே
கோரிய நல ஈழம் எங்கே (அதை) காணாமல் போனதெங்கே
பாரிய இழப்பே இங்கே சாந்தி நீ அடைக அங்கே

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

தந்தை, பேரன், பேத்தி,
சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள்.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

(13233)

+

## கண்ணீர் நிறைந்த எண்ணக் குமுறலின் 31ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
மெற்றில்டா மாலினி கிறிஸ்து ராஜா

தாயின் மடியில்: 1965 - 03 - 14　　இறையின் அடியில்: 1990 - 04 - 20

''என் வாழ்வு மின்னலைப் போல் மறைந்தது ஆயினும் நான் இறைவனில் ஒளிர்கின்றேன்''

அன்பின் உருவமே. உன் புன்சிரிப்பைப் பார்க்கப் பலர் காத்திருக்க எல்லோரையும் பரிதவிக்க விட்டாயே சின்ன வயதில் சிறகை விரித்தாயே. மரணமெனும் மாயக் கப்பலில் ஏறினாய். உன் நினைவுகளை நாம் சுமக்கிறோம். உன் கல்லறையில் எம் கண்ணீர்ப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றனவே. உன்னை நேசித்தோர் கலங்குகின்றனரே. திருமணமாகி இரண்டு திங்களில் தரணியை விட்டு மறைந்தாயே எல்லோர் நெஞ்சங்களிலும் நிறைந்தாயே. நாள்களோ நகர்கின்றன. உன் நினைவுகளோ ...... தொடர்கின்றன.

மாதவத்தால் மாநிலத்தில் மாநிலத்தோர்
வாழ்த்திடவே
மாதகலில் வந்துதித்த மாதரசி! - வேதனையைத்
தந்து சென்றீர்; சற்பித்தோம்
தத்தளித்து நாடோறும்
நொந்தழி கின்றோமே நாம்

வதுவைசெய் இனிது நீயும்
வாழ்குவாய் எனநி னைத்தோம்
புதுமையைச் செய்தே நீயும்
போந்தனை கர்த்தன் பாதம்
பதுமையைப் போன்ற வுன்றன்
புன்னகை காண்ப தெப்போ?
வெதும்பியே மாளு கின்றோம்
வேகுதெம் உடலம் அந்தோ!

நின் பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும்

அன்புக்கணவன், தாய், மாமி,
சகோதர, சகோதரிகள், மைத்துனமார்,
மைத்துனிமார், மற்றும் உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

சிலாவத்தை,
முல்லைத்தீவு.

[13231]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



இளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.



# உதயன்

20 - 05 - 1990 ஞாயிற்றுக்கிழமை



கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.




நேற்றுமுன்தினம் நெல்லியடியில் தேனிசை நிகழ்ச்சிக்கு வந்திருந்த மக்கள் வெள்ளத்தில் ஒருபகுதி.

## வைத்திய நிபுணர்களுக்கு தொலைபேசி வசதி இல்லை

யாழ்ப்பாணம், மே 20

யாழ் - போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் 12 வைத்திய நிபுணர்களினதும் இருப்பிடங்களுக்கு தொலைபேசி வசதி இல்லை. இதனால் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாதுள்ளதாக புகார் கூறப்படுகிறது.

பெரும்பான்மையான வைத்திய நிபுணர்களும் யாழ் — நகரப்பகுதிகளிலேயே வசிப்பதால், அவர்களை அவசர தேவைகளுக்கு அம்புலன்ஸ் அனுப்பியே கூட்டி வர வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தொலைபேசி வசதி அவர்களுக்கு வழங்கப்பட்டால், அவர்களிடம் தொலை பேசி மூலமே அறிவுறுத்தல்களைப் பெறலாம் என்று சுட்டிக் காட்டப்பட்டது. (இ - 3)

### தெல்லிப்பழை உ அ.அ.பிரிவு:
## 1,154 குடும்பங்களுக்கு வாரஇறுதியில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 20

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 1154 குடும்பங்களுக்கு எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் உற்பத்தி முயற்சிக்கான கொடுப்பனவுகள் 4000 ரூபா வழங்கப்படவிருக்கின்றன.

26 ஆம் திகதி மயிலிட்டி வடக்கு, அளவெட்டி கிழக்கு, மல்லாகம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும்

27 ஆம் திகதி தெல்லிப்பழை வடமேற்கு, மல்லாகம் வடக்கு, நகுலேஸ்வரம், அளவெட்டி வடக்கு, வயாவிளான், காங்கேசன் தெற்கு, தையிட்டி, கொல்லன்கலட்டி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருக்கின்றன. (இ-3)

## அறணை கடித்து மரணம்

வல்வெட்டித்துறை, மே 20

ஏணையில் துயின்று கொண்டிருந்த பத்து மாதக்குழந்தை ஒன்று அறணை கடித்து மரணமானது.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை சுப்பர் மடத்தில் இடம்பெற்றது. (இ-160)

## மட்டக்களப்பில் மீன்களுக்கு ஏற்பட்ட நோய் மேலும் பரவுவதாகத் தகவல்

கொழும்பு, மே 20

''மட்டக்களப்பு மாவட்டத்தில் மீனுக்கு ஏற்பட்ட நோயை அரசு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காததால் அம்பாறை உட்பட மற்றைய பிரதேசங்களுக்கும் அந்நோய் பரவி வருகிறது. இதனால் தொழில் இழந்து கஷ்டமுறும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

மட்டக்களப்பு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப். எம் எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான சட்டமூலம் விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: மட்டக்களப்பு மாவட்டம் மீனவர்கள் நிறைந்த பிரதேசம். கடந்த மூன்று மாதங்களாக மீன்பாடும் தேன் நாட்டில் ஒருவித நோயினால் மீன்கள் அழிந்துகொண்டிருக்கின்றன பொதுமக்கள் மீனின்றி கஷ்டப்பட்டு வருகின்றனர்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் சரிவர இயங்கவில்லை. அதன் உபகரணங்களும் பழுதடைந்து உள்ளன. இதனால் மீனவர்கள் ஆழ்கடல் சென்று மீன்பிடிக்க முடியாது உள்ளனர். இந்த துறைமுகத்தை உடனடியாக இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத் பேசுகையில், கிழக்குப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்படுகிறது. மணல் அள்ளப்படுகிறது. கடலுக்குப் பலியாகும் கரையைப் பாதுகாக்காவிடின் பாரிய விளைவுகள் ஏற்படும். சட்டவிரோதமாக கடற்பாறைகளையும், மண்ணையும் அகற்றுவதைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (இ-3-2)

## குருநகரில் கலைவிழா

குருநகர், மே 20

குருநகர் புனித யாகப்பர் ஆலய மகளிர் மன்றமும், நடன நல்லிசைக் கலாமன்றமும் இணைந்து வழங்கும் கலைவிழா குருநகர் ஐக்கிய முன்னணிக் கலையரங்கில் இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு நடைபெறும்.

பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மானுவேல தலைமையில் நடைபெறும் கலைவிழாவில் பேராலயப் பங்குத் தந்தை வண. பிதா ஹில்லறி ஜெபநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத்தினரின் இசை, நடன நிகழ்ச்சிகளும், புனித யாகப்பர் ஆலய மகளிர் மன்றம் தயாரித்தளிக்கும் ''பாஞ்சாலிசபதம்'' நாட்டுக் கூத்தும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறும். (இ 51)

## மீண்டும் ஹெல்மட்

கொழும்பு, மே 20

மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் ஹெல்மட் அணிந்து செல்ல வேண்டும் என்ற சட்டத்தை அமுல் நடத்துவது என்று அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

தென் இலங்கையில் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வந்த சமயம் 1988 ஆம் ஆண்டில் ஹெல்மட் அணிவதை கட்டாயப் படுத்தும் சட்டத்தை அமுல் நடத்துவது இடைநிறுத்தம் செய்து வைக்கப்பட்டது.

மீண்டும் இச் சட்டத்தை அமுல் நடத்துவது என்றமுடிவு கடந்தவெள்ளிக்கிழமைபோக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் நடந்த இணைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (இ-எ)

## ஜனதா தள் தலைவராக பொம்மை தெரிவு

புதுடில்லி, மே 20

ஜனதா தள் தலைவராக திரு. எஸ். ஆர். பொம்மை ஏகமனதாக நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

இரு பதவிகளையும் ஒருவர் வகிக்கக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் பிரதமர் வி. பி. சிங் ஜனதாதள் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே திரு. பொம்மை இப்போது தெரிவானார்.

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் திரு. பொம்மை ஆவார்.

இப்பதவிக்கு போட்டியிட்ட ஏனைய இரண்டு வேட்பாளர்களும் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்தே இது சாத்தியமாயிற்று. (இ-எ)

## றூட்நிறுவன குளிர்பான தொழிற்சாலை

யாழ்ப்பாணம், மே 20

''றூட்'' நிறுவன குளிர்பானத் தொழிற்சாலை இன்று ஞாயிறு மாலை 5.00 மணி அளவில் கோப்பாயில் திறந்து வைக்கப்படும்.

இது தொடர்பான வைபவத்தில் விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் உரை நிகழ்த்துவார்கள். (இ)

## ஷப்றா கிண்ணத்திற்கான அரை இறுதிப்போட்டி இன்று

யாழ்ப்பாணம், மே 20

ஷப்றா யூனிக் கோபினான்ஸ் லிமிட்டெட் ஆதரவில் ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் போட்டியின் இரண்டு அரை இறுதிப் போட்டிகளும் இன்று நடைபெறவுள்ளன.

யாழ் இந்துக்கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் காலை 8.30 மணிக்கு சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணியும், பகல் 1 00 மணிக்கு ''நியூ கோல்ட்ஸ்'' அணியை எதிர்த்து ஜொலிஸ்ராஸ் அணியும் மோதவுள்ளன.

நேற்று நடைபெற்ற இருகால் இறுதிப் போட்டிகளிலும் ஜொலிஸ்ராஸ் அணியும், ஜொனியன்ஸ் அணியும் வெற்றி பெற்றன.

கிறாஸ் கொப்பேஸ் அணிக்கெதிரான போட்டியில் ஜொலிஸ்ராஸ் அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் ஆடிய ஜொலிஸ்ராஸ் வழங்கப்பட்ட நேரத்தில் 28 ஓவர்கள் ஆடி 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 149 ஓட்டங்களைப் பெற்றது. பிரேம்நாத் ஆட்டமிழக்காமல் 49, சபிலன் 20ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் விஜயகுலன் 6ஓவர்களில் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கிருபாகரன் 6 ஓவர்களில் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய கிறாஸ் கொப்பேர்ஸ் அணியினர் 26.5 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். கிருபாகரன் 31, குலேந்திரன் 20, நவின்ஸ்ராஜ் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நரேந்திரன் 6 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும், வரதன் 5 5 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுகளையும், பிரபாகரன் 6 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

பற்றீசியன் அணிக்கெதிரான போட்டியில் ஜொனியன்ஸ் அணி 54 ஓட்டங்களால் வெற்றி பெற்றது முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 30 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 199 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் மகிந்தா 74 பிரசாந்தன் 37, ரவீந்திரா 22, பிரேமன் ஆட்டமிழக்காமல் 26ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரட்ணநாதன் 6 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுகளையும், இதயரூபன் 6 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். தொடர்ந்து ஆடிய பற்றீசியன் அணியினர் 28 3 ஓவர்களில் 145 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

பனிஸ்ரர் 23, ரட்ணநாதன் 22ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சஞ்சீவன் 6 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ரவீந்திரா 6ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும், சூரியகுமார் 6 ஓவர்களில் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (இ-மு)

## உடலினுள் 7 தங்கக்கட்டிகளை மறைத்து கடத்த முயன்றவர் கைது!

சென்னையில் இருந்து கடந்த வியாழன் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறந்திறங்கிய இலங்கைப் பயணி ஒருவரின் உடலினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏழு தங்க பிஸ்கட்டுக்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

அந்த நபர் மேலும் தங்கக் கட்டிகளை உடலினுள் மறைத்து வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் மீது நீர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அவர் எக்ஸ்ரே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். (உ-எ)

### வ. பி. போ. சபைக்கு
## தேவை 116 பஸ்கள்; ஆனால் சேவையில் 35 பஸ்களே!

''வடபிரதேச போக்குவரத்துச் சபையின் யாழ் சாலை சிறந்த சேவையை மக்களுக்கு வழங்க வேண்டுமானால் 116 பஸ்கள் தேவை. ஆனால் 35 பஸ்களே செயலாற்றுகின்றன. இந்நிலையில் எப்படி நாம் மக்களுக்கு திருப்திகரமான சேவையாற்ற முடியும்''.

- இப்படிக் கேள்வி எழுப்புகிறார் வடபிரதேச போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம்.

யாழ். குடாநாட்டு போக்குவரத்துச் சேவை பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''யாழ்ப்பாண சாலை தனது நிர்வாக வலயத்துள் இருக்கும் பிரதேசங்களுக்கு குறைந்த பட்ச போக்குவரத்து சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கு 101 பஸ்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இது மிக குறைந்த பட்ச தேவையே.

இந்த பஸ்கள் சேவையிலீடுபடும்போது ஏற்படும் திருத்த வேலைகளின் போதும், பஸ்கள் பராமரிப்பு காரணங்களுக்காக வேலைத்தளங்களுக்கு கொண்டு செல்லப்படும் பொழுதும் பதிலீடு செய்ய மேலதிகமாக 15 பஸ்கள் தேவையாக உள்ளன.

ஆகவே யாழ் சாலைக்கு 116 பஸ்கள் கையிருப்பில் இருந்தால் தான் நல்ல சேவையை வழங்க முடியும் ஆனால் தற்சமயம் 35 பஸ்களே உள்ளன.

இதே நேரம் எமது சாலையில் உள்ள 86 பஸ்களில் 48 பஸ்கள் என்ஜின், கியர், ரயர், ரியூப் போன்ற உதிரிப்பாகங்கள் இன்றி சேவையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளன. இந்த உதிரிப்பாகங்களைப் பெற நிதிவசதியும் இல்லை-என்றார். (உ-3)


### எமது இன்றைய புதிய வெளியீடுகள்

ராம்கி – சீதாவின்
★ மருதுபாண்டி ★
(ஒறிஜினல்)

ராஜசேகர் – ஜீவிதாவின்
இதுதாண்டா பொலீஸ் (ஒறிஜினல்)

நாகர்ஜுன் – அமலாவின்
★ உதயம் ★
திங்கள் வெளியீடு

பாரதிராஜாவின்
என்உயிர் தோழன்

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். [13240]


## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா

இம்மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணக் கல்லூரிப் பரிசளிப்பு விழா இம்மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கல்லூரிப் பூங்காவில் நடைபெறும்.

எஸ். ஜெபநேசன்,
அதிபர்

(சி-4558)

## OBITUARY

### Mr. Victor Arulampalam Thavathurai

Mr. Victor Arulampalam Thavathurai (Retired Irrigation Engineer, Jaffna) loving son of late Mr. & Mrs. V. Arulampalam of Kankesanturai, dearly beloved husband of Felicia, loving father of Vimal (U. K.), Merina, Helena and Swarkamal, brother of late Mr. V. Nesathurai, late Mr. Ponnudurai, Mr. V. Thambithurai (Wellawatte), Mr. Nagaratnam (Australia), Mrs. Rajasingham (Australia), son-in-law of Mrs. G. M. Arasasingham of Uduvil, brother in-law of Mrs. Divinia Aria-rasah, Gloria, Devaprasad (P. O., wellawatta), Mrs. Letitia Sivathasam (Doha), and Devakumar Arasasingham (U. K.) expired in Australia.
41/5, Bennalla Avenue, Ashfield, N. S. W. 2131, Australia.

A Serviec of thanksgiving for the live of Mr. V. A. Thavathurai, will be held at the residence of Mrs. G. Arasasingham, Uduvil at 4-00 p. m. on Sunday the 20th of May, 1990.

(13238) T. Sivapalan

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மார்க்கண்டர் பத்மாவதி

வட்டுக்கோட்டை மாவடியைச் சேர்ந்த திருமதி பத்மாவதி மார்க்கண்டர் காலமாகி விட்டார். இவர் அ. மார்க்கண்டரின் (இளைப்பாறிய லிகிதர் யாழ். அரசினர் வைத்தியசாலை], அன்பு மனைவியும், திருமதி இந்திரா, உதயசூரியன் (பிரதேசபை, சுழிபுரம்) செல்வி பாமா [போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], செல்வி தயா [உணவு அமைச்சு, திருகோணமலை], ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயசூரியனின் (விலைமதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மாமியும், பிரசன்னா கிரிசாந்தன், ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று சனிக்கிழமை [19-05-90] மாலை 4. 00 மணிக்கு வழக்கையாறு மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர் நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
தி. உதயசூரியன்

[13229]

### செல்லையா அருணாசலம்

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்தசெல்லையா அருணாசலம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அழகம்மாவின் அன்புக் கணவரும், இராசரத்தினம், வேலாயுதம் (சிறுகைத்தொழில் திணைக்களம், கொழும்பு), செந்திவேலாயுதம் [கிளி] கிரா றான்ஸ் போட், கருணைவேல், தங்கராணி, அன்னராணி ஆகியோரது அன்புத் தந்தையும், தங்கரத்தினம், சரஸ்வதி [ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி], தேவமனோகரி, தேவநாயகி, பஞ்சாட்சரம், ராசலிங்கம், ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை (பரமராஜா றேடிங் கம்பனி) சிதம்பரப்பிள்ளை, இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உடுப்பிட்டியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

உடுப்பிட்டி
தகவல்,
அ. இராசரத்தினம்.

[13151]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org